யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# வண்ணம்



- 2017 -

வெளியீடு : தமிழ்ச் சங்கம்

# வெள்ளம்

27.10.2007

# வண்ணம்

27.10.2017

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | தமிழ்த்தாய் வாழ்த்து | 01 |
| 02. | வண்ணம் - தமிழ்ச்சஞ்சிகை - 2017 நூலாக்கக்குழு | 02 |
| 03. | வண்ண மொழிக்கு வாழ்த்துக்கள் | 03 |
| 04. | பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி | 04 |
| 05. | இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து... | 05 |
| 06. | கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகள் | 06 |
| 07. | தமிழ் மொழியின் சிறப்புக்கள் | 08 |
| 08. | உண்மைக்கும் நேர்மைக்கும் | 11 |
| 09. | உள்ளத்தின் ஒளி | 13 |
| 10. | ஈழத்து இலக்கிய வரலாற்று பரப்பில் மருதூர்க் கொத்தன் 1935 - 2004 | 15 |
| 11. | சிறுநீரக நோய்களும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களும் | 19 |
| 12. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் | 21 |
| 13. | மருத்துவமும் குறளும் | 22 |
| 14. | மன அமைதி | 24 |
| 15. | மது | 26 |
| 16. | மொழிபெயர்ப்பு | 28 |
| 17. | நான் மருத்துவனானால் | 30 |
| 18. | தமிழில் எண்களின் விந்தை | 31 |
| 19. | உள்ளத்தனையது உயர்வு | 33 |
| 20. | இலக்கிய விமர்சனம் | 35 |
| 21. | நான் அறிந்த இலக்கியகர்த்தாக்கள் | 40 |
| 22. | கடல் கடந்த பறவைகள் | 42 |
| 23. | மூன்றாம் உலகப் போர் | 44 |
| 24. | முதியோரைப் பேணுவோம் | 46 |
| 25. | மாற்றம் காண்போம் | 47 |
| 26. | சுயதேடலின் தேவை | 48 |
| 27. | தாய்மை | 49 |
| 28. | முதுமையின் விளிம்பில் | 50 |
| 29. | மூன்றெழுத்து | 51 |
| 30. | உன் கண்ணில் நீர் வழிந்தால்... | 52 |
| 31. | துடிப்பின் எல்லை | 55 |
| 32. | தாய் | 58 |
| 33. | அற்புதமான கலை ஓவியம்.....!!! | 59 |
| 34. | கனவு (சிறுகதை) | 61 |
| 35. | "எண்ணித்துணிக" | 64 |
| 36. | பாடசாலைக் கீதம் | 79 |
| 37. | விளம்பரங்கள் | 80 |
| 38. | நன்றி நவில்கின்றோம் | 84 |

# தமிழ் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்டனமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போலுலகவாழ்க்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.

"மனோன்மணியம்" – சுந்தரம்பிள்ளை

# வண்ணம் - தமிழ்ச்சஞ்சிகை - 2017

## நூலாக்கக் குழு

திருமதி. இ.சிவலிங்கம்

திருமதி. ய.முரளிதரன்

திருமதி.இ.அருந்தவநாதன்

திரு.பொ.கேதீஸ்வரன்

திருமதி.கு.கிருஸ்ணராஜா

திருமதி.ஜெ.சிவானந்தம்


திரு.ப.கேசவன்

திருமதி.ஜீ.கேசவன்

## விழாக் குழு



# வண்ண மொழிக்கு வாழ்த்துக்கள்



எதிர்கால உலகிற்கு ஏற்ப நாம் எம்மை பல்துறை ஆற்றல்கள் பெற்றவர்களாக வளர்க்க வேண்டியது அவசியமாகும். வெறுமனே பாடப்பரப்பினூடாகப் பெறும் அறிவு மட்டும் ஒரு மனிதனை முழுமைப்படுத்தாது. மொழித்திறனானது எம் ஆற்றலினை வளர்க்க பரந்து விரிந்த ஒரு பாதையாகும்.

வாசித்தல், பேசுதல், எழுதுதல் முதலிய தேர்ச்சிகள் விடயங்களைத் தேடவும் தேடியவற்றை ஏனையோருக்குக் கடத்தவும் பேருதவியாகவுள்ளது. எமக்கெல்லாம் வழிகாட்டிய பேரறிஞர்கள் பலர் வாசித்தலூடாக அதிக அறிவைத் தேடிக் கொண்டார்கள். அத்துடன் நின்றுவிடாமல் தேடிய அறிவுச் செல்வத்தைச் சுருதி வழியிலும், நூல்களை ஆக்குவதனூடாகவும் ஏனையோருக்குக் கடத்தும் உயரிய பணியையாற்றியுள்ளனர்.

எனவே மாணவர்களே உங்களிடையே இலை மறை காயாகவுள்ள திறன்களை வெளிப்படுத்துங்கள். நிறைய வாசியுங்கள், உங்கள் திறன்களை பேச்சினூடாகவும், எழுத்தினூடாகவும் வெளிப்படுத்துங்கள்.

இவ்வாண்டில் 'வண்ணம்' எனும் சஞ்சிகையூடாக பல ஆக்கங்கள் வெளிவருவது பாராட்டத்தக்கது. மேலும் உங்கள் திறன்களை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை உருவாக்குங்கள். இம் முயற்சியிலீடுபடும் சகலருக்கும் பாராட்டுக்களுடன் எனது வாழ்த்துக்களும் சமர்ப்பணம்.

**திரு.ச.வேலழகன்**
**அதிபர்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியின் வரலாற்றில் மன்றங்களின் செயற்பாடுகள் காத்திரமானவை. கல்லூரியின் தமிழ் மன்றம் தமிழ்ச்சங்கம் என்ற பெயருடன் இயக்கத் தொடங்கிய காலந்தொட்டு தமிழ்விழா மிகச் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. 1992 ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கம் மிகச்சிறந்த முறையில் முன்னெடுத்த தமிழ் விழாவிலே முதன் முதலாக 'வண்ணம்' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்த சஞ்சிகை தொடர்ந்து வெளிவர முடியாமல் போனது. கல்லூரியின் பொதுவான சஞ்சிகை வெளிவந்த காரணத்தினால் 'வண்ணம்' சஞ்சிகையைத் தமிழ்ச்சங்கத்தால் வெளியிட முடியவில்லை. ஆயினும் அமரர்.ந.சிவகடாட்சம் அதிபர் காலத்திலிருந்து தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகள் கல்லூரியின் செயல்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு ஆண்டுதோறும் தமிழ்விழா கொண்டாடப்பட்டது.

1997 ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் விழாவின் போது கல்லூரிக் கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது. ஆண்டு தோறும் நடைபெறும் தமிழ் விழாவின் போது பல செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. கல்லூரியில் இரு வாயில்வளைவுகளும், நுழைவாயில் கதவுகளும், தமிழ்தாய் சிலை, சி.வை.தாமோதரம்பிள்ளை சிலை, திருவள்ளுவர், ஔவையார் சிலைகளும் அமைக்கப்பட்டன. பாடசாலைக்கான குழாய் நீர் விநியோகம், ஒலிபெருக்கிச்சாதனங்கள் வழங்கப்பட்டன. சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு என்ற நூலும் வெளியிடப்பட்டது. திரு.சி.சிவலிங்கம் அவர்கள் தமிழ்ச்சங்கப் பொறுப்பாசிரியராக இருந்த போது இச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. நீண்ட காலத்தின் பின் வண்ணம் சஞ்சிகை மீண்டும் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. 'வண்ணம்' ஆண்டு தோறும் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். இவ் ஆண்டில் வெளிவரும் வண்ணத்தில் மாணவர்களது ஆக்கங்களும் ஆசிரியர்களின் ஆக்கங்களும் மலரை அலங்கரிக்கின்றன. வண்ணத்தின் வரவிற்காக கல்விப்புலம் காத்திருக்கும் காலம் இனிவரும் காலங்களில் வரவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி.இராஜினிதேவி சிவலிங்கம்
பிரதி அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...



மன்றங்களின் செயற்பாடுகள் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள், ஆளுமைவிருத்தி, தலைமைத்துவப்பண்பு என்பவற்றை வளர்ப்பதில் பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றன. அந்த வகையில் எமது தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் தமிழ்விழாவை நடாத்தும் போது பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத் தக்கது. கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள செயற்றிட்டங்களில் தமிழ்ச்சங்கத்தின் பங்களிப்புக்கள் காத்திரமானவை. மாணவர்களின் ஆக்கச் செயற்பாட்டின் வடிவமாகவே சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டும் 'வண்ணம்' எனும் பெயரில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி சஞ்சிகை வெளியிடப்படுகிறது. இச்சஞ்சிகை மாற்றுக்குறையாத வண்ணமாக இனி வரும் காலங்களிலும் மலர்ந்து மணம் வீச வேண்டும் என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி.யசோதா முரளிதரன்
இதழாசிரியர்

# கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகள்

1852ஆம் ஆண்டு C.M.S மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட எமது கிறிஸ்தவ கல்லூரி அன்னையின் 165ஆம் ஆண்டு வரலாற்றில் தடம்பதிக்கப்பட்ட சாதனைகள் பல. கல்லூரியின் நீண்டகால வளர்ச்சிப் போக்கில் தம் அளப்பரிய சேவையினால் கல்லூரியை உயர்நிலைக்கு இட்டுச் சென்ற அதிபர்களின் தன்னலம் கருதாத பணிகள் போற்றுதற்குரியவை. தமது ஆளுமைமிக்க செயற்பாட்டினால் கல்விச் செயற்பாடுகளிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் அவர்கள் காட்டிய முனைப்பான நடவடிக்கைகள் அனைத்தும் யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு இணையாக எமது கல்லூரியை இனங்காண வைத்தது.

எமது கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு மாணவர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கல்லூரியின் பௌதிக வள அபிவிருத்திக் காலமாக தற்போதைய அதிபர் திரு.சண்முகநாதன் வேலழகன் காலத்தைக் குறிப்பிடலாம். அயலிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்திலும் எமது கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுகூடம், இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிடம், அதிபர் விடுதி ஆகியன புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. செல்லையா மண்டபம் பெருந்திருத்த வேலைத்திட்டத்தில் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இராஜசேகரம் மண்டபமும் புனரமைக்கப்பட்டு நுண்கலைத் துறைகளுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நினைவு மண்டபம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. பெண்களுக்கான நவீன மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் உதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக ஆசிரியர்களுக்கான மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் உபயோகத்திற்கு நிறைவான வகையில் சுகாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மலசலகூடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

பழைய மாணவர்களுடனான தொடர்புகள் சிறப்பான முறையில் பேணப்பட்டு வருவதன் காரணமாக அவர்களின் நிதிப்பங்களிப்பின் மூலம் உள்ளக வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. நவீன வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சைக்கிள் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ தேவாலயம், இந்து ஆலயம் ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன. லண்டன் பழைய மாணவர் சங்க நிதியுதவியுடன் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான உணவூட்டல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் (Virtual Class) கற்கை ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நினைவு மண்டப மேடை திருத்தம், வேலியின் ஒரு பகுதி திருத்தம், உருக்கு அலுமாரிகள், இன்னியம், ஒலிபெருக்கி உபகரணங்கள், பாண்ட் (Band) வாத்தியக் கருவிகள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

இந்தியத் துணைத் தூதரகத்தால் இசைக்கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரிப் பழைய மாணவர்கள் இல்ல மெய்வல்லுநர் போட்டி, பரிசளிப்பு விழா, தமிழ் விழா, ஒளி விழா, நவராத்திரி விழா, ICT தின விழா என்பவற்றிற்கு நிதி உதவியும், பொருளுதவியும் வழங்கி வருகின்றனர். அண்மையில் லண்டனில் வதியும் பழைய மாணவி ஒருவரினால் சரஸ்வதி சிலை ஒன்று அமைத்துத் தரப்பட்டுள்ளது. கல்வி விருத்திக்காக வசதி குறைந்த மாணவிகளுக்கு கல்லூரிப் பழைய மாணவர்கள் கற்றலுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகின்றனர்.

பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்குடன் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. வளவாளர்களின் உதவியுடன் கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. லிபரா நிதியுதவியுடன் க.பொ.த (சா/தர) மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையின் மூலமும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் மூலமும் எதிர்வரும் ஆண்டுகளில் பரீட்சைப் பெறுபேறுகளிலும் சாதனை படைக்கும் கல்லூரியாக மிளிர வேண்டும் என்பதே எமது பேரவாவாகும்.

எமது கல்லூரி பிரிட்டிஸ் கவுன்சில் விருதைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் இலக்கிய விமர்சனத்தில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. சாரணியம், கடேற் ஆகியவற்றின் செயற்பாடுகள் உயர்நிலை பெற்றுள்ளன. “பாடசாலை முன்னோடிச் செயற்பாடுகள்” கல்லூரி சிறந்த ஆண்டறிக்கை மற்றும் கணக்கறிக்கைக்கான போட்டியிலும் எமது கல்லூரி தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. புத்தாக்கச் செயற்பாட்டிலும் எமது மாணவர்கள் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

கல்வி அபிவிருத்தியிலும் இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணிப் பாடசாலையாக விளங்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் இயங்கி வரும் எமது கல்லூரியின் இலட்சிய நோக்கு நிறைவேற வேண்டும் என்பதே எமது பேரவாவாகும்.

திருமதி.இ.சிவலிங்கம்
பிரதி அதிபர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# தமிழ் மொழியின் சிறப்புக்கள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்! குமரி முதலாக இமயம் வரையான முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ்! தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றைத் தன்னாபரணமாகப் பூண்ட தண்டமிழ்! ஆம்! செந்தமிழ்ப் பெருமை சொற்களுள் அடங்காது.

உலக மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் (3000) என தமிழ் வரலாறு எனும் நூலில் மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இயல்பாகத் தோன்றிய நம்தமிழ் மொழிக்குப் பதினாறு பண்புகள் உள்ளன. நம் தமிழ் மொழி பவகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் பாவாணர். தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்பன சிறப்புக்கள் ஆகும்.

உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழிக்கு மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால் தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் எனும் நூல்வழி அறியலாம். மேலும் அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ். இதனால் தான் தமிழ் இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளன. அவ்வாறு நிலை பெற்ற மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து வெறும் வெறும் இலக்கிய மொழியாக மட்டுமே காட்சியளிக்கின்றன.

கால மாற்றத்திற்கேற்ப புத்தம்புது மொழிகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவ்வாறு தோன்றி மாயும் மொழிகளுக்கிடையே, மிகப் பழங்காலத்திலேயே தோன்றி செல்வாக்குடன் வளர்ந்து, இன்றளவும் வாழ்ந்து விளங்குவன தமிழ், சினம் முதலிய சில மொழிகளேயாகும். தமிழ் மிகவும் பண்பட்ட மொழி தனக்கே உரியவலம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி மாக்ஸ்முல்லர் பழமைக்கும் பழமையாய் இலக்கிய வளமுடையதாய் நிற்பதோடு புதுமைக்கும் புதுமையாய் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது நமது தமிழ் மொழியாகும்.

ஆதியிலே பிறந்த மொழிகளாய் ஆரியமும் தமிழும் கருதப்படுகின்றன. இவற்றிலிருந்து பல மொழிகள் பிறந்து வளர்ந்துள்ள தாய்மைச் சிறப்புத் துலங்கும் இவை தொன்மையும் செம்மையும் உடையன. இதில் வடமொழித் தாயின்

குழந்தைகள் மட்டுமே உயிரோடு இருக்க தென் மொழித்தாயான தமிழோ தன் குழந்தைகளுடன் மங்காப்புகழ் பெற்று குன்றாத இளமையுடன் திகழ்கின்றது. கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழின் பிள்ளைகளாகத் தோன்றின. பல மொழிகள் நாட்டு வழக்கற்றும் ஏட்டு வழக்கற்றும் போக நற்றமிழ் மட்டும் நானிலம் போற்ற நளினமாய் நடைபயில்கிறது. இன்னும் தமிழ் ஒரு திரி சொல்லாய் பல்வேறு மொழிகளுள் புகுந்து பரவியுள்ளது.

"தமிழ்" என்னும் சொல் முதன் முதலில் காணப்பெறும் நூல் தொல்காப்பியமாகும் "தமிழென்கிளவி", "செந்தமிழ்நிலத்து" என வரும் நூற்பாத் தொடர்களில் இவ்வுண்மையைக் காணலாம். பகம் பாரனார் தம் தொல்காப்பியப் பாயிரத்தில்வரும் "தமிழ் கூறும் நல்லுலகத்து" எனும் தொடரும் தமிழின் தொன்மையைத் தெளிவாகக் காட்டுவனவாம். "தமிழ் வையைத் தண்ணம்புனல்" என எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடல் தமிழின் இனிமையைக் கூறுகின்றது. செந்தமிழ், பைந்தமிழ், அருந்தமிழ், நறுந்தமிழ், தீந்தமிழ், முத்தமிழ், கண்ட தமிழ், தண்டமிழ், வண்டமிழ், தெளிதமிழ், இன்றமிழ், தென்றமிழ், நற்றமிழ், தெய்வத்தமிழ், மூவாத்தமிழ், கன்னித்தமிழ்......

மனித இனம் வாழவும், வசிக்கவும் ஏற்புடைய நிலமாக விளங்கியது. இன்றைய தமிழகத்தின் தென்நிலப்பரப்பு என்பது ஆய்வறிஞர்களின் கருத்தாகும். அந்தத் தென் நிலப்பரப்பிலே பேசப்பட்ட மொழியானது மிகத் தொன்மை வாய்ந்த நமது உயர்தனிச் செம்மொழி தமிழாகும் என்பது பன்னாட்டு மண்ணியல், உயிரியல், அறிவியலாளர், ஆய்வுகளின் வழி கிடைக்கப்பெற்ற ஒருமித்த உண்மைக் கருத்துக்கள்.

குமரிக்குத் தெற்கேயுள்ள நிலப் பகுதியே மக்கள் வாழ்வதற்குத் தக்க நிலையை அடைந்தது அங்குதான். முதன் முதலில் மக்கள் தோன்றி வளர்ந்து நாகரிகத்தை உலகிற்கு பரப்பினர். தமிழ் தந்த காப்பியங்கள் எண்ணுக் கணக்கற்றவை. பொய்யாமொழிப் புலவர் செய்த திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாவனையிலுள்ளன. ஐம்பெரும் காப்பியங்களும் தமிழை இன்னும் அழகுபடுத்துகின்றனர். பழகு தமிழில் பாரதியார் இயற்றிய கவிதைகளும் புகழ் பெற்றவையே.

இலகு தமிழில் இன்றிக் கடினத்தமிழ் நூல்களான தொல்காப்பியம், நிகண்டு என்பனவும் பெரிதும் பொருள் பொதிந்த பொக்கிஷமாகும். இரண்டே அடிகளில் இவ்வகிலம் அளந்த குறளின் தகைமை கருதினால், உலகமே தமிழுக்குள் அடங்கிப் போனது எனினும் மிகையல்ல. இச்சிறப்பு வேறெந்த மொழியில் உண்டு. ஆனால் இத்துணை சிறந்த எம் தமிழ் இன்று வெறும் நாகரிகமோகத்தால் கொச்சைத்

தமிழாய்த் தலை குனிந்து நிற்கும் சந்தர்ப்பமும் உண்டு. பிறமொழி மோகம் பலரையும் ஆட்டிப் படைக்கிறது. தமிழ்ப் பாடல்கள் என்ற போர்வையுள் மேலைத்தேச இசைக்கோலங்கள் பல மறைந்து கிடைக்கின்றன. சங்கத்தமிழ்ப் புகழ்மங்கிச் செல்லும் அபாயம் நெருங்குகிறது. மொழிக்கலப்பால் தமிழின் தனித்துவ அழகு சிதைகிறது. இனிமை கெடுகிறது.

தமிழின் நிலைப்பாட்டிற்கு வழிகோலிய பாண்டிய மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தை களப்பிரர், பல்லவர், மராட்டியர் முகமதியர்கள், நாயக்கர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் என பல்லினத்தவர் ஆட்சி செலுத்தினர். அதிகார பீடத்திலிருந்தோரின் பண்பாடு, சமயம், மொழி ஆகியவற்றின் தாக்குதலால் தமிழ் இலக்கியத்திலும் பற்பல மாறுதல்கள் உருபெற்றன.

இவ்வேளையில் தமிழ் வளர்த்த பெரியோரின் வரலாறுகள் மீட்டுப் பார்க்கப்பட வேண்டும். "முன்னைப்பழம் பொருட்டு முன்னைப்பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் வாழ்கின்ற இறைவன் போல" எம்மொழி தன்னிலை மாறாது வாழ மாணவ சமுதாயம் பாடுபட வேண்டும். தெளிவாகத் தனி அழகு சிதையாதபடி பல்மொழியறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே"
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

கு.கேசனா
**11 B**

மேன்மை மிகுந்த வாழ்வு வேண்டுமா உயர்ந்த இலட்சியத்தைக் கைக்கொள்ளுங்கள்.

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது என்பது சுலபம் ஆனால் உயிரைக் கொடுப்பதற்கான நண்பன் கிடைப்பது தான் கடினம்.

# கடந்த தமிழ் விழாவின் பதிவுகள் சில














# உண்மைக்கும் நேர்மைக்கும்

செயற்கரிய செய்த பெரியவர்களையும் அறிவு நலன் படைத்த சான்றோர்களையும் குறித்து நிற்கும் சொல்லே உலகம் என்ற கருத்துக்குரியது. இத்தகைய பெரியோர்களும் சான்றோர்களும் உள்ளத்தில் உண்மை ஒளி படைத்தவர்கள். இதனால் அவர்களது வாக்கிலும் உண்மை ஒளி பிரிவகித்து அந்த உண்மையையும் அவர்களின் நேர்மையையும் பின்பற்ற உள்ளம் விழைகின்றது ஆன்மீக நாட்டமுள்ள ரிஷிகளும், சமயப் பெரியோர்களும், ஞானிகளும், சித்தர்களும் மறந்தும் பொய் பேசாத சிந்தனையாளர்கள். இதன் காரணமாகவே இவர்கள் ஞானக் கண்களுக்கு இறைவன் காட்சி கொடுத்தான். ஆன்மீக ஞானம் பெறுவதற்கும் உள்ளத்திலுள்ள உண்மை ஒளியே காரணம் எனலாம்.

உபநிடதங்களிலே உண்மையின் தத்துவம் வலியுறுத்தப்பட்டது. குருகுலக் கல்வி முறை நிலவிய அக்காலத்தில் குருவின் இருப்பிடம் நாடிச்சென்று அவருடன் உறைந்து அவருக்குப் பணிவிடை செய்து கல்வியைக் கற்கும் மாணவன் தன் குலத்தைக் கூற வேண்டும். சத்தியகாமன் என்பவன் தன் குலத்தையே அறியாதவன். அவன் தன் குருவிடம் பொய் உரைக்காது தன் குலம் யாது என்பது தெரியாதெனக் கூறுகின்றான். அவன் உண்மை கூறியதால் உள்ளம் மகிழ்ந்த குரு "நீயே உண்மையான அந்தணன்" எனக் கூறித் தனது சீடனாக ஏற்றுக் கொள்கின்றார். இதன் மூலம் உண்மையும், நேர்மையும் நிறைந்த குரு தன் மாணவர்களிடம் அந்த நற்பண்புகளை எதிர்பார்த்தார்.

இதிகாசங்கள், அறநூல்கள், சங்க இலக்கியங்கள் யாவும் சமுதாயத்திற்கு அறத்தைப் போதிக்கின்றன. உண்மை, நேர்மை என்ற உயர்ந்த விழுமியங்களைப் போற்றி வாழ்ந்தவர்கள் அடைந்த மேன்மையைப் பாத்திரங்களின் வாயிலாகச் சமுதாயத்திற்குப் போதிக்கின்றன.

உண்மை, நேர்மை ஆகிய நற்பண்புகளைப் போதிக்கும் நிலையங்களாகக் கல்விச்சாலைகள் செலாற்றுகின்றன. இவ்வரிய பண்புகள் வீட்டிலே விதைக்கப்பட்டுப் பாடசாலைகளில் நன்கு வளர்க்கப்பட வேண்டும். எம்முன்னோர்கள் பேணிய இந் நற்பண்புகளை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கிச் சமுதாயத்திற்கு அவர்களை வழங்க வேண்டும். இவ்வரும் பணியினை எடுத்துக் காட்டும் முகமாகவே எமது கல்லூரியின் மகுட வாக்கியமாக "உண்மைக்கும் நேர்மைக்கும்" என்பது விளங்குகின்றது.

இவ்வாக்கியம் சிறுபராயத்திலிருந்தே கல்வி கற்கும் யாவர் மனதிலும் பதிக்கப்படும் நல்வாக்கியமாக விளங்குவதுடன் கல்லூரியின் இலச்சினையிலும் பொறிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த வாக்கியமாக விளங்குகின்றது. "உண்மையே உயர்த்தும் ஏணி", "நேர்மையே நிறைந்த செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாக்கியத்தின்படி மாணவர்கள் உண்மை பேசுபவர்களாக உருவாக வேண்டும். நேர்மைக்கு இலக்கணமாக விளங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மாணவர்கள் நடமாடும் இடங்களிலும், மாணவ முதல்வர்களின் இலச்சினைகளிலும் இம் மகுட வாக்கியம் பொறிக்கப்பட்டுள்ளது. வாழ்வின் சிறப்புக்கு முக்கிய அங்கமாக விளங்குவது பெருமக்களின் அறிவு. அறிவுடையவன் நல்லவற்றைப் பின்பற்றுவான். சத்தியம் மனிதனைத் தெய்வமாக்கும். அரிச்சந்திரன், மகாத்மாகாந்தியடிகள் உண்மையின் தத்துவத்தைப் புரிந்து வாழ்ந்த இத்தகைய பெரியோர்களின் வாழ்க்கையை எமது மாணவர் சமுதாயம் பின்பற்ற வேண்டும். கல்வியின் பயன் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மை உள்ளவர்களாகவும் வாழ்வதே ஆகும்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் மிஷனரிமார்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. எமது நாட்டிலே வாழ்கின்ற மக்கள் கல்வியறிவுடையவர்களாக வாழ வேண்டும். அவர்கள் மாக்களாக இருக்காமல் மக்களாக வாழ்வதற்கு அவர்களுக்குக் கல்வியை கொடுக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு அவர்களால் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு மிஷனரிமார்களால் உருவாக்கப்பட்ட கல்லூரிகளில் ஒன்றுதான் எமது கல்லூரியாகிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதுடன் நல்ல பண்புடையவர்களாகவும் விளங்க வேண்டும் என்ற நோக்குடன் கல்லூரியின் மகுட வாக்கியமாக "உண்மைக்கும் நேர்மைக்கும் என்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

ம.ரம்மியா
12 கலை

கல்வி என்பது ஒருவன் அறியாத பொருளை அறியவைப்பதில்லை. ஒருவனுக்கு தெரியாத பண்புகளைத் தெரியவைப்பது.

நீ பின்னாலிரு முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்படுவாய்.

பிறர் குறை காண்பவன் அரை மனிதன். தன் குறை காண்பவன் முழு மனிதன்.

# கடந்த தமிழ் விழாவின் பதிவுகள் சில











## உள்ளத்தின் ஒளி

மனித இனம் காலம் காலமாக பல்வேறு சிந்தனைகளை வளர்த்து முன்னேற்றம் கண்டு வந்துள்ளதை நாம் கண்டு கொள்ள முடிகின்றது. ஒருவனின் எண்ணங்களில் உருவாகின்ற கருத்துக்களுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற பொழுது அச்செயலின் தன்மையினை உணர்ந்து கொள்ள முடிகிறது. உயர்ந்த எண்ணங்களின் செயல்கள் உயர்ந்தனவாக விளங்குவதையும் தாழ்ந்த எண்ணங்களின் செயல்கள் இழிந்தனவாக காணப்படுவதையும் மனித வாழ்வியலில் கண்டு கொள்ள முடிகிறது.

இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பொய்யாமொழிப் புலவர் உணர்ந்து கொண்டுள்ளார். அதாவது அவர் தனது நூலான திருக்குறளில்

“வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனையது உயர்வு”

என்று உற்சாகமாக குறள் உரைத்துள்ளார். அதாவது நீரின் உயரத்திற்கு ஏற்ப மலர்த் தண்டின் உயரம் விளங்குவது போல ஒருவரின் ஊக்கத்தின் அளவிற்கேற்ப அவரின் உயர்வு காணப்படுகின்றது என்றார்.

ஒருவனை செயற்கையாக யாரும் உயர்த்திவிட முடியாது. அவனது உயர்ச்சி அவனது எண்ணத்தை பொறுத்தே சாத்தியம் ஆகின்றது. உயர்ந்த இடங்களில் தகுதி அற்றவர்களை உட்கார வைத்தாலும் நல்ல எண்ணங்கள் இல்லை என்றால் அவ்விடத்தில் அவர்களால் உயர்ந்த நிலையை அடைய முடியாது. பெரிய தலைவர்களை உருவப்படங்களாலும், உயரிய வார்த்தைகளாலும் எடுத்துக் கூறினாலும் வலுவானது எண்ணங்கள் இல்லாதவர்கள் தலைமை தாங்கும் நிலைகளை இழப்பது உறுதி. அந்த எண்ணங்களின் பிறப்பிடம், இருப்பிடம், ஏன் இறப்பிடம் எல்லாமே மனம் தான். அதைப் பொறுத்தே உயர்வு.

உலகிலே உருவான எண்ணங்களிலே உயர்வான எண்ணம், கடவுள் என்ற எண்ணம். அதன் தூய்மை, ஆற்றல், பெருமை எல்லாமே எல்லை அற்றவை. காலத்திற்கும், பரிமாணங்களுக்கும் அப்பாற்பட்ட எல்லையற்ற ஒன்றை தமது உள்ளத்தில் அடக்கி வைக்கலாம் என்ற சிந்தையே எவ்வளவு உயர்வானது. உள்ளம் தான் கடவுள் குடியிருக்கும் இடம் என்ற கருத்தில் “உள்ளம் பெரும் கோயில் ஊண் உடம்பு ஆலயம்” என்று ஞானிகள் மொழிந்துள்ளனர்.

மனதில் எதனை எண்ண வேண்டும் என்பதில் இன்றைய இளைஞர்கள் தெளிவுடன் இருக்க வேண்டும். விலை மதிப்பில்லாத இந்த இதயத்தை கடவுள் கொடுத்தார். அதில் ஒழுக்கம் கெட்ட ஒரு சிலரை உள்ளே வைத்திருப்பது தகுமா? களவு, பொய், காமம் இவற்றைக் கடைப்பிடித்து வாழும் சில தலைவர்களை இதயத்தில் வைத்து பூசிப்பது படைத்தவன் மனது பற்றி எரியாதா? சிந்திக்க வேண்டியது. அரசியல் அழுக்குகளையும், சினிமா சூத்தைகளையும் இதயத்திலிருந்து

தூக்கி எறிந்து விட்டு இறைவன், கடவுள் என்ற தூய எண்ணத்தை இதயம் முழுவதும் நிரப்ப வேண்டும். உள்ளத்தின் உயரமே உங்கள் உயரம் மறந்து விடாதீர்கள்.

இன்றைய இளைய சமூகத்தில் இலக்கிய செல்வங்களின் கருத்துக்கள் அருகிப் போகின்றன. இலக்கியங்களைப் படிப்பதன் மூலம் மனதைப் பண்படுத்திக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்களின் வரலாற்றைப் படிக்க வேண்டும். அதனை உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழில் அரிய இலக்கியமாக விளங்கும் கம்பராமாயணத்தில் வரும் தன்னிகரில்லாத தலைவன் இராமன் உயர்ந்த எண்ணங்களை உடையவனாக விளங்கியமையால் பல்வேறு துன்பங்களை அனுபவித்தாலும் ஈற்றில் வெற்றி பெறுகின்றான்.

கூனியின் சூழ்ச்சியால் கைகேயி தசரதனிடம் இரண்டு வரம் வேண்டும் என்கின்றார். தசரதனும் பல்வேறு வேண்டுகோளிற்குப் பிறகு கொடுத்து விடுகின்றான். அந்த நிலையில் கைகேயி இராமனிடம் சென்று அவ் வரங்களைச் செப்புகின்றாள். இராமா நீ பதினான்கு ஆண்டுகள் காடு ஆள வேண்டும். என்மகன் பரதன் பதின்நான்கு ஆண்டுகள் நாடாள வேண்டும் என்பது மன்னவன் கட்டளை என்கின்றார். இந்த இடத்தில் தான் இராமனின் உயர்ந்த உள்ளம் வெளிப்படுகின்றது. இதற்கு இராமன் பதிலளிக்கின்றான் "மன்னவன் பணியாகிலும் நுண்பணி மறுப்பேனோ என் பின்னவன் பெற்ற செல்வம் யான்பெற்ற தன்றோ" அம்மா, அப்பா கூறினார் என்று சொல்ல வேண்டுமா? நீ கூறினால் நான் செய்ய மாட்டேனா? என்றும் எனது தம்பி பெற்ற ஆட்சி தான் பெற்றதைப் போல் ஆகாதா? என்றும் எனது தம்பி பெற்ற ஆட்சி நான் பெற்றதை போல் ஆகாதா? என கூறுகின்றான். இத்தகைய உயர்ந்த உள்ளத்தால் தான் இராமன் காட்டை ஆண்டவன் நாட்டை ஆளும் நிலை உருவானது. இதனை அனைத்து இளைய தலைமுறையினரும் உணர்ந்து கொண்டு செயற்பட்டால் வாழ்வில் உயர்வடைய முடியும்.

ஏன் இதைவிடவும் சமகாலத் தலைவர்களின் வாழ்வியலை எடுத்துப் பாருங்கள். எல்லோருக்கும் தெரிந்த உயர்ந்த மனிதன் டாக்டர் அப்துல்கலாம் அவர் இளமையிலே வறிய குடும்பத்தில் பிறந்து குடும்பத்தைக் காப்பாற்ற வீடுவீடாக பத்திரிகை விற்ற சிறுவன். அந்த சிறுவனே ஒரு நாட்டின் ஜனாதிபதியாக உயர்ந்தான் என்றால் அவன் இளமையிலே மனதில் கொண்ட உயர் எண்ணமே காரணமாகும். அது மட்டுமா? பத்திரிகை விற்ற அப்துல்கலாம் பற்றியே பத்திரிகை முழுவதும் எழுதும் நிலைக்கு உயர்ந்து விளங்கினார் என்றால் நாம் ஏன் உயர்வடைய முடியாதா? இதனை சிந்தித்து செயற்படுவோம் ஆயின் நாம் வரலாற்றில் இடம்பிடித்து விடுவது திண்ணம். எனவே உள்ளத்தின் ஒளியே வாழ்வின் ஒளி என்பதை அறிந்து செயற்படுவோமாக.

*"வாழ்க வளமுடன்"*

**திரு.பொ.கேதீஸ்வரன்**
(B.A (Hons) P.G.D.E, M.A
**ஆசிரியர்**

# ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பரப்பில் மருதூர்க் கொத்தன் (1935 - 2004)

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளத்துக்கும், வளர்ச்சிக்கும் உழைத்தவர்கள் பலர். அவர்கள் தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி இஸ்லாமிய, கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்கூடாக வந்தவர்களும் இதில் பெரும் பங்காற்றியுள்ளனர். நவீன தமிழ் இலக்கிய ஆக்கச் செயற்பாடுகளின் மூலம் தமிழ் ஆளுமையினை வெளிக் கொணர்ந்தவர்களுள் முஸ்லிம் படைப்பாளிகள் கணிசமானளவு பங்காற்றியுள்ளனர். அவர்களுள் கிழக்கு இலங்கையைச் சேர்ந்த மருதூர்க்கொத்தன் என்னும் புனைபெயர் தாங்கிய வி.எம்.இஸ்மாயில் சிறப்புற்று விளங்குகின்றார். இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த இவர் ஒரு முஸ்லிம் தமிழராவார். இவரது நிரந்தரமான இடம் மருதமுனையே எனினும், இவர் பிறந்த இடமோ அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த காளாவி என்ற கிராமம் ஆகும். திருகோணமலை சோனகவாடியைச் சேர்ந்த வாப்புமரைக்கார் என்பவருக்கும் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னமுத்து என்பவருக்கும் 06.06.1935 இல் இவர் பிறந்தார்.

சிறந்த கல்விப் பின்புலத்தைக் கொண்ட இவர் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்றவர். இயல்பாகவே இவரிடம் இருந்த இலக்கிய ஈடுபாடும் கல்விப் பின்புலமும் இவரை எழுத்துலகுக்கு இழுத்து வந்தது. மேற்கூறியவாறான வாழ்க்கைப் பின்னணியினையும் கல்விப் பின்புலத்தையும் கொண்ட மருதூர்க் கொத்தன் சிறுகதையாளர் மட்டுமல்ல. சிறந்த கவிதைகளையும் நாடகங்களையும் உருவகக் கதைகளையும் விமர்சனங்களையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தவர். இவை மட்டுமல்லாது இவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளனும் கூட. இவர் நாடகங்களை எழுதியதோடு மட்டும் நில்லாது அவற்றிலே நடிக்கவும் செய்தார். கையெழுத்துப் பிரதிகளுக்கு இவர் வரைந்த ஓவியங்கள் அவ்விதழ்களுக்குப் புதுமெருகு ஊட்டின.

இவர் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரைகள் எனப் பல துறைகளிலும் தன் திறமைகளை வெளிப்படுத்தினாலும் சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தினூடே இவரது ஆளுமை பெரிதும் வெளிப்பட்டு நிற்கின்றது. இவர் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பை ஆற்றியுள்ளார். கொத்தனது சிறுகதைகள் உருவ அமைதியுடனும் உள்ளடக்கச் சிறப்புடனும் அமைந்து காணப்படுகின்றது. இவரிடம் நல்ல கருத்து வளம் செறிந்திருப்பதை அவரது சிறுகதைகளின் கருப் பொருட்களில் இருந்து உணர முடிகின்றது. சான்றுகளாக 'சாதிகள் இரண்டே', 'அழகிய இதயங்கள்', 'வெட்டுமுகம்' போன்ற சிறுகதைகளைக் குறிப்பிடலாம். இவர் தனது சிறுகதைகளிலே மனிதனது உணர்வு நிலைகளையும் அவனது யதார்த்த பூர்வமான வாழ்க்கைக் கூறுகளையும் சிந்தனா பூர்வமாகச் சித்திரித்துள்ளார்.

மருதூர்க்கொத்தன் ஜனரஞ்சகமாக எழுதி சாதாரண வாசகர்களை ஈர்த்து விடுபவரல்லர். தான் கதையில் கொண்டுவரும் பாத்திரத்திற்குக் கற்பனா உயிர் கொடுத்து யதார்த்தப்பாங்குடன் உலவவிடும் வடிவமைப்பாளர். இவரது மொழிநடை தனித்துவமாகத் தெரிந்து விடக் கூடியது. ஏனெனில் அரபுச் சொற்கள் விரவிய இஸ்லாமிப் பேச்சு வழக்குச் சொற்களும் பிரதேச மண்வாசனை மிளிரும் வழக்காற்றுச் சொற்களும் கொண்டு தனக்கென ஒரு தனித்துவமான மொழி நடையினைக் கொண்டுள்ளார். எந்த வர்க்கம் சார்ந்த, எந்தச் சமூகத்தினைச் சார்ந்த கதாபாத்திரம் உரையாடுகின்றது எனத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார். அவற்றோடு இவர் தனது சிறுகதைகளில் கையாண்ட உத்திகளான கதைத்தலைப்பு, கதையோட்டம், ஆரம்பம், முடிவு முதலானவையும் வர்ணனைகள், உருவகங்கள், பழமொழிகள், அடுக்கு மொழிகள் என்பவற்றைக் கையாண்ட வகையில் சிறப்புப் பெறுகின்றன.

இவரது சிறுகதைகளை வாசகர்கள் வாசிக்கத் தொடங்கும் போது சிறிது சலிப்படையவே செய்வர். ஏனெனில் இவரது சிறுகதைகள் இறுக்கத் தன்மை கொண்டதாக உள்ளது. இந்தக் கதையிறுக்கத்திற்கு காரணம் சம்பவங்களையும், நிகழ்வுகளையும் நகர்த்திச் செல்லப் பயன்படுத்தும் மண்வாசனை மிளிர்ந்த மொழிநடையே ஆகும். அத்தோடு இவரது கதைகளின் முடிவிலே தான் அக்கதையின் தொனிப்பொருளும் கருப்பொருளும் வெளிப்படுகின்றது. இது இவருடைய சிறுகதைகளில் காணப்படும் பொதுவான ஒரு அம்சம் ஆகும். இவற்றோடு இவருடைய இஸ்லாமியச் சொற்கள் கலந்த பேச்சு வழக்குகளும் மொழிநடையும் இனி வரும் காலத்தில் இஸ்லாமிய மொழியின் ஆய்வுகளுக்கு உதவுவதோடு பேச்சு மொழியின் முக்கியத்துவம் பற்றியறியவும் பெரிதும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

1956க்குப் பின்னர் ஈழத்துச் சிறுகதைகளில் பிரக்ஞைபூர்வமான கதை வடிவங்கள் தோன்றி கருத்தேற்றம், இலக்கிய உணர்வு, சமுதாயத்தாக்கம் என்வற்றைப் பிரதிபலித்து நிற்கின்றன. 1970களிற்குப் பின்னர் இப் பிரதிபலிப்பு இன்னும் இறுக்கமடைந்து சமூகவாதக் கருத்தேற்றம் பெற்றுச் சமத்துவயுகத்தை நோக்கி வீறுநடை பயில்கின்றன. மருதூர்க்கொத்தனின் சிறுகதைகளைப் படிப்பவர்கள் இக்கூற்றினை நிச்சயம் ஒப்புக்கொள்வர். இவருடைய கதைகளுக்கூடாக அவர் காலத்துச் சமுதாயத்தை என்னால் பார்க்க முடிந்தது. “கொத்தன் கிழக்கிலங்கை மண்ணை அப்படியே ஜீவத்துடிப்புடன் தனது கதைகளில் படைத்து விட்டார்” என்ற டொமினிக்ஜீவா, வ.அ.இராசரத்தினம், செங்கை ஆழியான் போன்றோரது கூற்று பொய்யானதல்ல என்பது அவருடைய சிறுகதைகள் பற்றிய ஆய்வின் போது புலனாகிறது.

சமகாலச் சமுதாயப் பிரச்சினைகளை உள்வாங்கி ஒரு முற்போக்குச் சிந்தனையுடன் பிரதேச மண்வாசனை குன்றாது கலைத்துவமாக எழுதி அதில் வெற்றி பெற்ற பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி முதலானோரின் பார்வையிலே தவறிப்போனது துரதிஷ்டவசமானது. எனினும் இவரது பல சிறுகதைகள் காலத்தை வென்றும் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு இவரிடம் பல நல்ல தரமான சிறுகதைகள் உள்ள போதும் ஒரு தொகுதி மட்டுமே வெளிவந்துள்ளது. மேலும் பல தொகுதிகள் வெளிவர வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமாகும்.

எனவே சிறப்பாக இஸ்லாமிய இலக்கிய வளத்துக்குப் பங்காற்றிய முஸ்லிம் படைப்பாளிகளில் முன்னணியில் நிற்கும் இவர், பொதுவாக ஈழத்துச் சிறுகதை வரலாறு பற்றி நோக்குமிடத்து இவரைத் தவிர்த்து விட்டு இதன் முழுமையைப் பார்க்க முடியாதவாறு மருதூர்க்கொத்தன் காத்திரமான பங்காற்றிய வகையில் ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றில் சிறப்புற்று விளங்குகின்றார்.

**திருமதி.கு.கிருஸ்ணராசா**
**தமிழ் ஆசிரியர்**
**சிறப்புக் கலைமாணி.**

**மனிதனுக்கு தரவேண்டிய மூன்று உயர்ந்த பட்டங்கள் தியாகி, வீரன், சான்றோன்.**

**நல்லாகாத இதயமும் களைக்காத மனப்பாங்கும், மற்றவர்களைத் தேவையற்ற விதத்தில் நோகச் செய்யாத அணுகுமுறையும் கொண்டிரு.**

**பரிசுத்தமான மனமுடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமாகவே காண்கின்றான்.**

# கடந்த தமிழ் விழாவின் பதிவுகள் சில








## சிறுநீரக நோய்களும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களும்

ஒரு மனிதனிடமிருந்து பிறிதொரு மனிதனுக்குக் கடத்தப்படாத நோய்கள் தொற்றாத நோய்கள் என அழைக்கப்படும்.

தொற்றாத நோய்களில் சில பின்வருவனவாகும்.
புற்று நோய், சுவாசப்பை நோய்கள், சிறு நீரக நோய்கள், இதய நோய்கள்.

தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கு புகைத்தல், மதுபாவனை, தவறான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி குறைவு என்பன காரணங்களாகும். அந்த வகையில் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றி அறிந்து கொண்டு இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்தல் அவசியமானதாகும்.

குறுகிய காலத்தில் சிறுநீரகம் செயலிழக்கும் நிலை சிறுநீரக நோய் எனப்படும். சிறுநீரகத்தினால் மேற்கொள்ளப்படும் சிறுநீர் உற்பத்தி உட்பட சாதாரண செயற்பாடுகள் படிப்படியாகக் குறைவடைவதால் சிறுநீரக செயலிழப்பு ஏற்படுகின்றது.

**சிறு நீரக செயலிழப்பு ஏற்படுவதற்கான காரணங்கள்.**

நீரிழிவு நோய்
உயர்குருதியமுக்கம்
தொடர்ச்சியான சிறுநீர் தொற்று
சிறுநீர்ப்பையில் கற்கள் உருவாதல்
நுண்ணங்கித் தொற்று
நச்சுப் பொருள் உடலுடன் சேர்தல்
ஒவ்வாமை

சிறுநீரக செயலிழப்பானது 2 முறைகளில் நடைபெறும்
1. குறுங்கால சிறுநீரகச் செயலிழப்பு
2. நீண்டகால சிறுநீரகச் செயலிழப்பு

**குறுங்கால சிறுநீரகச் செயலிழப்பு**

சில மணித்தியாலங்கள் முதல் சில நாட்கள் வரை சிறுநீரகம் தற்காலிகமாகச் செயலிழக்கும் நிலையாகும். இச்செயலிழப்புக்குத் துரிதமாகச் சிகிச்சை பெறுவதன் மூலம் பழைய நிலையை அடைய முடியும்.

**இதன் அறிகுறிகளாவன.**

1. இரவில் சிறுநீர் வெளியேற்றப்படும் தடவைகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.
2. சிறுநீர் வெளியேற்றப்படும் அளவு குறைவடைதல்.
3. உடல், முள்ளந்தண்டு என்பில் வலி ஏற்படுதல்.
4. பாதம், கணுக்கால் வீங்குதல்
5. வெளிறல்
6. வெளியேறும் சிறுநீரில் புரதம் காணப்படல்
7. உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் புள்ளிகள் தோன்றுதல்.

**நீண்ட கால சிறுநீரகச் செயலிழப்பு**

சிறுநீரகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் வேறு நோய் நிலைமைகள் நீண்டகாலம் நிலவும் போது மீண்டும் பழைய நிலையை அடைய முடியாதவாறு படிப்படியாக சிறுநீரகம் செயலிழக்கப்படுதலே இதுவாகும். விவசாய இரசாயனப் பொருட்களை விசிறுபவர்களுக்கே இந்நோய் உருவாகும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. இந்நோய் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கே பெரும்பாலும் ஏற்படுகின்றது. நோய் அறிகுறிகள் தோன்றுதல் தாமதமாவதால் தமக்கு நோய் தோன்றியுள்ளதை மக்கள் அறியாமல் உள்ளனர். நோய் அறிகுறி தெரியும் போது சிறுநீரகத்தின் 40% - 60% அளவு செயலிழந்து காணப்படும்

**இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்**

1. சயனோ பற்றீரியாக்களினால் விடுவிக்கப்படும் நச்சுப்பொருள்கள் உடலை அடைதல்
2. விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் உடலை அடைதல்
3. பாரவுலோகங்கள் உடலை அடைதல். (Cd,Pb,As,Pd)
4. புளோரைட்டு மிகையாகக் கொண்ட நீரைப் பருகுதல்
5. சவர் நீரைப் பருகுதல்
6. அதிக நீரிழப்பு
7. கட்டுப்பாடற்ற முறையில் மருந்துகளைப் பயன்படுத்தல்
8. மதுப்பாவனை

வளர்ந்தோர் நாளொன்றுக்கு 3.5-4.5 லீற்றர் சுத்தமான நீரை அருந்துதல், விவசாய, இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துதலையும் அவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளை உடகொள்வதைத் தவிர்த்தல், நீரிழிவு, உயர்குருதியமுக்கம் என்பவை ஏற்படாதவாறு கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கைக் கோலத்தைக் கடைப்பிடித்தல் போன்றவற்றின் மூலம் தற்கால இலங்கை எதிர்நோக்கும் பிரதான பிரச்சனையாகிய சிறுநீரக நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்து வாழ்வோமாக!

*"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"*

திருமதி.த.கருணாமூர்த்தி
ஆசிரியர்

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது முதுமொழி. பல்லாண்டு காலமாக நம் முன்னோர் பயன்படுத்தி வரும் பழமொழி இது. இப்பழமொழி கருத்துமிக ஆழமானது. மனிதக் குலத்துக்குப் பாடம் கற்றுத் தருவது.

முக அழகு என்பது ஒருவருடைய முக அமைப்பைப் பொறுத்த விடயம் மட்டுமல்ல. மூக்கு அழகாக, எடுப்பாக, கண்கள் கவர்ச்சியாக, உதடுகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த, நெற்றி பிறை நிலாத் தோற்றம் கொள்ள இருந்து விட்டால் மட்டும் அந்த முகம் அழகாகிவிடும் என்று கூறுவதற்கில்லை.

இயற்கையே, முகத்தை உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கண்ணாடியாக ஆக்கி வைக்கின்றது. உள்ளத்தில் நிழலாடும் உணர்ச்சிகளை கிளர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவது முகமாகும். சிறு குழந்தைகளின் முகங்களை நாம் பார்ப்போமாயின் அவர்களது அக அழகை அவர்களது முகம் நன்கு காட்டும். இத்தோற்றத்தை குழந்தைத்தனம் என்று கூறுவர். மாசுமறுவற்ற அவர்களது உள அழகே அவர்களது முகங்களில் பிரதிபலிக்கின்றது. ஆனால் வயது முதிர்ந்தோரின் முக அழகைக் குழந்தைகளின் முக அழகுடன் ஒப்பிட்டுக் கூறிவிட முடியாது. குழந்தைகள் வஞ்சகம் அற்றவர்கள். உள்ளம் பால் போல் தூய்மையானது.

நாற்பது வயதுக்குப் பிறகு ஒருவன் தன்னுடைய முகம் எப்படி இருக்கின்றது என்பதற்கு அவனே பொறுப்பாளி ஆகிறான் என்கிறார் ஆபிரகாம்லிங்கன். ஒருவன் உள்ளத்து உணர்வுகளை அவனுடைய முகமே காட்டிவிடும் என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

உள்ளம் தெளிவாக, உணர்ச்சிபூர்வமாக எண்ணங்கள் தூய்மையாக இருக்கும் போது முகத்துக்கு ஒரு தனி அழகு - தேஜஸ் ஏற்பட்டு விடுகின்றது. உலகம் போற்றும் பெரியவர்களின், மகான்களின் முகங்களைப் பாருங்கள் அவை சாமுத்திரிகா இலட்சணப்படி அழகான முகத்தோற்றம் கொண்டவை என்று சொல்வதற்கு இல்லை. ஆயினும் அவர்களது முகப்பொலிவு அனைவரையும் அவர்கள் பால் ஈர்த்து விடுகிறது. அவர்களது அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிப்பதே இதற்குக் காரணமாகும்.

"அடுத்தது காட்டும் பளிங்கு போல் - நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

தன்னையடுத்த பொருளினையுடைய நிறத்தை தானேகொண்டு காட்டும் பளிங்குபோல, ஒருவன் நெஞ்சத்தில் எழும் உணர்வுகளை அவன்முகம் தானே கொண்டு காட்டும் என்கிறார் வள்ளுவர். அவர் மேலும்

"முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்
இவ்வாறு கூறுகின்றார்.

இதிலிருந்து நாம் விளங்குவது என்னவெனில் நாம் என்ன செய்தாலும் அதனை எமது முகப்பொலிவு காட்டும் என்பது உண்மையே.

ஜெ.துளசிகா
தரம் - 6

# மருத்துவமும் குறளும்

வள்ளுவம் கூறும் சொற்கள் ஒவ்வொன்றும் ஆழமான, அகலமான ஆய்விற்கு உட்படுத்தக் கூடியதாகும். எனவே தான் வெறும் ஒன்றே முக்கால் அடியில் அமைந்த குறளுக்கு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலங்களிலும் விளக்கங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. குறளைப் பயன்படுத்தாத ஒரு பேச்சு அல்லது கட்டுரை என்பன மிக அரிதாகவே காணப்படுகின்றன. இன்று வரை அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறளுக்கு அகண்ட விளக்கங்களை அளித்து வருகின்றனர். அந்த வகையில் ஒரு குறளை மருத்துவர் ஒருவர் பயன்படுத்தக் கூடிய விதத்தை நாம் நோக்கலாம்.

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்து நன்மையவர்"

நல்லறிவாளர்கள் தாங்கள் சொல்லுகின்ற சொல்லின் தரமறிந்து, சமயமறிந்து கூற வேண்டும். மருத்துவர் ஒருவரின் வாய்ச்சொற்கள் ஒரு நோயாளிக்கு மருந்தாக அமையும். இது ஒரு உளவியல் ரீதியான சிகிச்சையாகவும் இருக்கும். நோயாளியின் நம்பிக்கையையும் மனத் தைரியத்தையும் அதிகரிக்கும். அதே வேளை மருத்துவரின் வாயிலிருந்து உமிழப்படும் தகுதியற்ற சொற்கள் ஒரு நோயாளியின் நோயை அதிகரிக்கும். நஞ்சாகவும் மாறலாம்.

மருத்துவர்கள் மட்டுமன்றி எவராக இருந்தாலும் சொற்கள் அவற்றைப் பயன்படுத்த தெரிந்தவர்களுக்குப் பல முனைகளைக் கொண்ட பயனுள்ள ஆயுதம். பயன்படுத்தத் தெரியாதவர்களுக்கோ அது சிறுபிள்ளையின் கையிலுள்ள ஆயுதம் போன்று தனக்கும் பிறருக்கும் ஆபத்தை உருவாக்கும் ஒன்றாக மாறி விடக் கூடும். சோறு சிந்தினால் பொறுக்கி எடுக்கலாம். ஆனால் சொல் சிந்தினால் பொறுக்க முடியாது. மனிதரிடத்திலிருந்து புறப்படும் சொற்கள் அதன் பலனை வெளிப்படுத்தாமல் திரும்புவதில்லை என்று யேசு வேதாகமத்திலே கூறியிருக்கிறார். சுவாமி சச்சிதானந்த யோகி அவர்கள் "உண்மையைப் பேசுக, நன்மையைப் பேசுக, அளவாகப் பேசுக, மெதுவாகப் பேசுக, இனிமையாகப் பேசுக, சிந்தித்துப் பேசுக, சமயமறிந்து பேசுக, சபையறிந்து பேசுக, பேசாதிருந்தும் பழகுக" என சொற் பயன்பாட்டினை வரையறுக்கின்றார். வாய்மொழியால் வெளிப்படுத்தாத பல விடயங்களை கண்களும், முகபாவமும் வெளிப்படுத்தி விடும்.

ஒரு மருத்துவரின் வாயிலிருந்து வரும் சொல் ஒரு தாக்கத்தைத் தரக்கூடிய தகவலாக இருக்கும். இது எப்படியான தாக்கமாக அமையும் என்பது மருத்துவரின் உளவியல் ரீதியான அறிவு, அனுபவத்தைப் பொறுத்து அமையும். சொல்லப் போவது துக்ககரமான செய்தியாக இருந்த போதிலும் அதனை நோயாளி ஏற்கக் கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்திச் செல்லும் வல்லமை, தகுதியுள்ள ஒரு மருத்துவருக்கு இருக்கும். அந்தவகையில் குறளின் மருத்துவத்தை மருத்துவத்துறையில் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்பது குறள் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

எனவே திருக்குறளின் பல குறள்கள் இதே போன்று மருத்துவப் பயன்பாட்டிற்கு உரியதாக அமைந்துள்ளன. பல ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்நூலினை கையாண்டு பயன்பெற்றோர் பலர். “பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்ற கூற்று மாறி “பழையன தேடலும் புதியன புகுத்தலும்” என்ற வாக்கினை சிரமேற் கொண்டனர் பல சான்றோர் என்பது தெளிவாகிறது.

திருமதி.யசோதா முரளிதரன்
(ஆசிரியர்)
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

மனிதன் கல்வி கற்பது ஆணியும், ஊசியும் செய்வதற்காக அல்ல, மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தான் கல்வி கற்பது.

# மன அமைதி

வாழ்க்கையின் அர்த்தமே மன அமைதி தான். மனத்திலே சஞ்சலம் இல்லாமல் மிகத் தெளிவான மனத்துடன் எவன் தனது அன்றாடப் பொழுதைக் கழிக்கின்றானோ அவன் நடத்துவது தான் வாழ்க்கை.

மனிதன் பெறக்கூடிய உயர்ந்த செல்வம் மன அமைதி ஒன்றுதான். மனதிலே அமைதி நிலைகுலைந்து இருக்கும் போது கோடி கோடியாகச் செல்வத்தைக் குவித்து வைத்துக் கொண்டாலும் அவனால் இன்பமாக வாழ முடியாது. மன அமைதியின் அடிப்படையில் மன ஒருமைப்பாட்டுடன் செயற்படும் எவரும் வாழ்க்கையில் அரும் பெரும் சாதனைகள் ஆற்றி வெற்றி பெறுகிறார்கள்.

மனதில் மாசற்ற இயல்பும், அறிவும், உணர்வும், தெளிவும் பொருந்தியுள்ளவனால் மன அமைதியுடன் நின்மதியுடன் வாழ்க்கை நடத்த முடியும். பிறரால் அல்லது தீய சக்திகளால், தொல்லைகள், துன்பங்கள் வரும் போது மனமாசு இல்லாதவருடைய உடல் தான் பாதிக்குமே தவிர மனதில் எந்த வித சலனமோ, சஞ்சலமோ ஏற்படாது. எந்த நிலையிலும் அவன் மகிழ்சியுடனும் மன அமைதியுடனும் இருப்பான்.

மன அமைதியை ஒரு மனிதன் பெற்று விட்டான் என்றால் மாபெரும் சக்தியான மன அமைதி - மன உறுதி சக்தி வாய்ந்த ஒரு சமுதாய அமைப்பின் முது கெலும்பாகி சமுதாயத்தையே உயர்த்திவிடும்.

அமைதி நிறைந்த மனம் ஆற்றல்மிக்கதாக இருக்கும். செயலில் வேகம் இருக்கும். சாதாரண மக்களால் சிந்திக்கக் கூட இயலாத அரும் பெரும் சாதனைகளை ஆற்றுகின்ற வல்லமை அந்த மனதுக்கு இருக்கும். மன அமைதியுள்ளவனிடம் மன வலிமை மிகுந்திருக்கும். மன வலிமை மிக்கவன் நினைத்த காரியம் யாவற்றிலும் வெற்றி பெறுவான். அவன் ஈடுபடும் எந்தச் செயலும் வெற்றியில் தான் முடிவடையும் இத்தகைய வலிமை வாய்ந்த மனவலிமையை, அமைதியை நிரந்தரமாகப் பெற எளிதான மார்க்கம் தான் தியானம்.

'தியானம்' என்றால் மெய், மொழி, எண்ணம் என்பவற்றால் இறைவனை ஆழ்ந்து சிந்தித்தல் என்று பொருள்படும். மனதை சற்றும் சலனமடைய விடாது ஒரே நிலையில், ஒரே நோக்கில், பிடிப்போடு ஒரு பொருளைப் பற்றி நிற்க வேண்டும்.

'தியானம்' என்பது தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது என்பது ஒரு பொதுவான உண்மை. தெய்வ நம்பிக்கை இல்லாதவது கூட தியான முறையினைப் பயன்படுத்தலாம்.

மனிதன் தன்னிடத்தில் உண்மையான வலிமையை தேக்கி வைத்துக் கொள்ள உதவுகின்ற சாதனம் தான் தியானம். வாழ்க்கையில் ஒரு தெளிவான குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு அதனை சிக்கலெதுவுமின்றி அடைவதற்கு தியானம் உதவுகின்றது. வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், சச்சரவுகள், தோல்விகள் என்பவற்றை சக்தியிழக்கச் செய்து சுலபமாக முன்னேற பாதை அமைத்துத் தருகிறது தியானம்.

மனதை அலைய விடாமல் ஒரு முகப்படுத்தி எண்ணங்களுக்கு வலிமை ஏற்றிச் செய்யப்படும் எந்த முயற்சியும் மனிதனுக்கு வெற்றியை அளிக்கும். வாழ்க்கையில் எந்தத் துறையில் நாம் தொடர்பு கொண்டிருந்தாலும் அந்தத் துறையில் அக்கறையுடனும், முழு மன ஈடுபாடுடனும் ஈடுபட்டால் படிப்படியான உயர்வினைப் பெறலாம்.

சிதறிச் சீரழியும் மனித மனத்தை ஒழுங்குபடுத்தி அதன் பேராற்றலை ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தி சரியான இலக்கு நோக்கிச் செலுத்தி மகத்தான வெற்றி பெற உதவும் சாதனம் தியானம் என்கிறார் மகாத்மா காந்தி அடிகள்.

'சித்தத்தை ஒரு முனைப்படுத்துவதற்கு உள்ள ஒரே வழி தியானம் மட்டுமே' என்றார் வினோபாபாவே. மனிதனின் ஆளுமை என்பது மனதின் மகத்தான வல்லமையைக் குறிக்கும். இந்தப் பிரமிப்பூட்டும் வல்லமையினை பெறுவதற்கு தியானம் உதவுகிறது என்கிறார் விவேகானந்தர்.

எனவே மன அமைதி என்பது மனித வாழ்க்கையின் உயர்வுக்கும், மகிழ்ச்சிக்கும், இன்பத்திற்கும் ஆதாரமான ஒன்று என்பது உறுதி. இந்த அமைதியை தியானம் செய்வதன் மூலம் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

திருமதி.இராஜமனோகரி அருந்தவநாதன்
(ஆசிரியர்)

## மது

மது உணர்வூட்டும் பொருள் அல்ல. உணர்வை, உடலை அழிக்கும் ஒரு நச்சுப் பொருள். மது அருந்துவதால் சுதந்திர உணர்வு தோன்றுவதாகவும், அதிக சக்தி கிடைப்பதாகவும், களைப்பு நீங்குவதாகவும் பலர் நினைக்கின்றார்கள். இளமைப் பருவத்தில் மதுவால் அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை என்றாலும் பிற்காலத்தில் மதுவினால் ஏற்படும் பாதிப்புக்கள் ஏராளம். மது நேரடியாக இரத்தத்தில் கலந்து விடுவதால் குடித்தவுடன் சிறிது நேரத்திற்கு உற்சாகம் பிறக்கிறது. மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் நாளடைவில் எல்லா நோய்களையும் கொடுத்து சிறிது சிறிதாக நம்மை அழிக்கிறது.

மதுவின் தீமைகளை உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் "மது நீண்டகால நலக்கேடு என்றும் தீய செயல்" என்றும் கூறகிறது. மது உடல் நலத்தை கெடுப்பதோடு சமுதாயச் சீர்கேடுகளையும் ஏற்படுத்துகிறது. மதுவிற்கு அடிமையாகின்றவர்கள் "ஏழைகள், கூலித்தொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள், கவலைப்படுபவர்கள், மனநிம்மதி இழந்தவர்கள் போன்றவர்களே அதிகம் மது அருந்துவதாக புள்ளி விபரங்கள் கூறுகிறது. சந்தோஷத்திற்காக குடிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு மதுவிற்கு அடிமையாகி விடுவதோடு குடும்பத்தையும் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றார்கள். குடிப்பழக்கம் உள்ள வீட்டுக்குழந்தைகளும் நாளடைவில் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப் போகும் நிலை ஏற்படுகிறது.

**மதுவினால் ஏற்படும் பிரச்சினைகளாக**

01. மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பாதித்து உடல் நலத்தை சீர்குலைக்கிறது.
02. மது குடிப்பதனால் கல்லீரல் பாதிக்கப்பட்டு கல்லீரல் இறுக்க நோய் ஏற்படுகிறது. பின்னர் கல்லீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாகிறது.
03. மது வயிற்றுக்குள் செல்லும் போது குடல் பாதிக்கப்பட்டு இரப்பை சுழற்சி ஏற்பட்டு குடல் புண் ஏற்படுகின்றது. வாய், தொண்டை, உணவுக்குழாய்களில் புற்றுநோய் ஏற்பட வழிவகுக்கிறது.
04. தோளிலும், காலிலும், தசை நார் இழப்பு ஏற்படுகிறது.
05. உடலில் சர்க்கரை சத்தைச் சீர்படுத்தும் கணையம் பாதிக்கப்படுகிறது.
06. அடிக்கடி மறதி ஏற்பட்டு சோர்வு ஏற்படும்.

07. Korsakoffs Syndrome (கோர்ஸா கா.ஃ.ப்ஸ் சின்ட்ரோம்) என்ற மூளை பாதிப்பு நோய் ஏற்பட வழிவகுக்கிறது.

08. உயிர்ச்சத்து குறைவால் வெர்னிக் சின்ட்ரோம் (Wernikes Syndrome) என்ற நோய் ஏற்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

09. மது அருந்துபவர்களுக்கு மன நோய்கள் பல ஏற்பட்டு மன நோயாளிகளாகி விடும் வாய்ப்பு அதிகம்.

10. மது அருந்துபவர்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு தன்னை குறைவதால் தொற்று நோய்கள் வந்தால் எளிதில் தீராது.

இன்னும் எத்தனையோ பிரச்சினைகள். அத்தனையும் மதுவினால் ஏற்படுவதே. மதுப்பிரியர்களே! முதலில் மதுவை நீங்கள் குடிப்பீர்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மது மனிதனை குடிக்கும் என்பது மட்டுமே உங்கள் நினைவில் நிற்கட்டும்.

**ச.நிறோஜ்**
**13 வர்த்தகம்**

இரவும் பகலும் மாறி மாறி வருவது போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது தான் மனித வாழ்க்கை.

# மொழிபெயர்ப்பு

மானிடம் என்பது ஒன்று தான். ஆனால் அது பல்வேறு இயற்கைச் சூழல்களாலும், மொழிகளாலும், கலாசாரக் கூறுகளாலும் பல்வேறு விதங்களில் கிளைத்துக் கிடக்கிறது. கிளைத்துக் கிடக்கும் மானுடம் ஒன்றுபடத் துடிக்கும் துடிப்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அவற்றுள் மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததுமான பரிமாணம்தான் மொழிபெயர்ப்பு. பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் பல்வேறு மொழிகளில் மனிதன் தேடிக் குவித்த அறிவுச் செல்வங்களையும், கலை முயற்சிகளையும் சமூகம், பிரபஞ்சம், மனிதன் பற்றிய ஆய்வுகளையும் இடம், காலம், மொழி கடந்து இன்றைய மனிதனுக்குப் பாயச் செய்வதுதான் மொழி பெயர்ப்பு.

மொழி பெயர்ப்புக்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணம் கூறியுள்ளனர்.

"மூல மொழியிலுள்ள ஒரு செய்தியை அதற்கு நிகரான பெறும் மொழிச் செய்தியாகப் பெயர்ப்பதே மொழி பெயர்ப்பு" என்கிறார். *ஜே.சி.காட்போர்டு*

"மூலத்துக்கு இணையான பெறும் மொழி நிகரனைக் கண்டறியும் செயல்முறையே மொழி பெயர்ப்பு" என்கிறார். *"ஐசடோர் பிஞ்சக்"*

"ஒரு பாங்கமைவில் அமைந்த குறியீட்டுத் தொகுதியின் பொருளை இன்னொரு பாங்கமைவில் அமைந்த குறியீட்டுத் தொகுதியாக மாற்றுவதே மொழிபெயர்பு" என்றார். *"டான்டர்ட்"*

"பொருளுக்கு முதலிடமும் நடைக்கு இரண்டாம் இடமும் தரும் வகையில் மூல மொழிச்செய்திக்கு மிக நெருங்கிய இயல்பான நிகரினைப் பெறும் மொழியில் தருவதே மொழி பெயர்பு" என்கிறார். *"நைடா"*

மொழி பெயர்ப்பில் ஒரே சமயத்தில் இரண்டு மொழிகள் சம்பந்தப்படுகின்றன. அதாவது இரண்டு மொழிகளின் சொற்களஞ்சியம், மொழியியற் கூறுகள், அம் மொழியைப் பேசுவோரின் கலாச்சாரம், வரலாறு, வாழ்வுச்சூழல், வாழ்விடத்தின் புவியியல் அமைப்பு ஆகியவை சம்பந்தப்படுகின்றன. அந்த இரண்டு மொழிகளுள் ஒன்று மூலமொழி. மற்றையது பெறும் மொழி.

மொழி என்பதே ஒன்றை இன்னொன்றில் பெயர்த்து தருவது. நமது அனுபவங்கள், எண்ணங்கள், உணர்வுகள், தேவைகள், ஆசைகள் ஆகியவற்றை நாம் அறிந்த மொழியில் வாய்மொழியாகவோ எழுத்து மொழியாகவே பெயர்த்துத் தருகின்றோம். ஒரு குழந்தையின் மழலை தாய்க்கும் புரியும். மற்றவர்களுக்கு அவள் அதைப் பெயர்த்துத் தருகிறாள். ஆகவே மொழி பெயர்ப்பு என்பது எங்கேயோ, எப்போதோ தொடங்கி விட்டது. இன்றும் தொடர்கின்றது.' மொழி பெயர்ப்பு இல்லாமல் உலக வரலாறே இல்லை' என்கிறார் எல்.ஜி.கெல்லி. யூத மொழியிலிருந்து கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட 'யூத வேத நூலே' மேற்கு நாடுகளின் முதல் வரிவடிவ மொழி பெயர்ப்பாகும். பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவையே தமிழின் முதல் மொழி பெயர்ப்பாகும். பைபிளின் முதல் ஆங்கில மொழிபெயர்பு "விக்லிப் பைபிள்" ஆகும்.

தமிழில் திருக்குறளே அதிக உலக மொழிகளில் வெளிவந்த பைபிள், குரான் ஆகியவற்றை அடுத்து மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. இது மகிழ்வுக்குரியது. இன்றைய காலகட்டத்தில் நாளிதழ்களும், தொலைக்காட்சி நிறுவனங்களும், கணினி மொழிபெயர்ப்பும் மொழிபெயர்பு வரலாற்றில் குறிப்பிட்ட இடத்தை பெறுகின்றன.

மனிதன் பல்முகத் தேவைகள் உள்ளவன். பன்முக ஈர்ப்புக்களும் உள்ளவன். கவின்கலை அறிவியல், பொருளியல், வரலாறு, தத்துவம், நடைமுறைத் தேவைகள் என்று அவனது நாட்டம் விரிகிறது. ஒன்றிலே ஆழ்ந்த பயிற்சியும் ஈடுபாடும் உள்ளவன் வேறு ஒருவர் ஆழ்ந்து அறிந்ததை அறிந்து கொள்ள முயல்கின்றான். இது மனித வாழ்வின் இயல்பான கூட்டுத்தன்மையைக் காட்டுகிறது. மனித வாழ்க்கையே கூட்டு வாழ்க்கை தான்.

காலங்காலமாக இனம், மொழி, நிறம், நாடு என்பவற்றைக் கடந்து யார் யாரோ முயன்று தேடிய அறிவு அடிப்படைகளில் தான் நாம் வாழ்வின் அடிப்படைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றோம். அழகானது, சத்தானது, தேவையானது, பயனுள்ளது என்பதை எங்கு கண்டாலும் அதைத் தனதாக்கி மகிழும் தன்மை மனிதனுக்கு உண்டு. மனித இனம் முழுவதின் சாதனைகளையும் மனிதன் மிக இயல்பாகத் தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் பெருங்கருவியாக அமைவது மொழிபெயர்ப்பு. அதனால் ஒட்டு மொத்தமான மனித இன வளர்ச்சியில் வரலாற்றில் மொழி பெயர்ப்பு பேரிடம் பெறுகிறது.

இ.இராஜ ஜிதேந்திரன்

**12 Sci (2019)**

# நான் மருத்துவனானால்

மனிதன் மகிழ்ச்சியாக வாழப் பிறந்தவன். அவன் துன்பங்களின் சுமையாளியாக மாறக் கூடாது. அவனுக்கு வேண்டியது குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வேயாகும். அவன் மருத்துவமனைகளின் நெருங்கிய வாடிக்கையாளனாக மாறிவிடக் கூடாது.

நான் மருத்துவனானால் நோயற்ற வாழ்வு வாழும் வழிவகைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவேன். அதன் மூலம் சமுதாயத்தின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவனாவேன். நோய்களைப் பெருக்கி சிகிச்சை அளிக்கும் நிலையினை மாற்றிட முயல்வேன். நோய்கள் பரவா வண்ணம் வாழும் நெறிகளை மக்களுக்கு எடுத்துரைப்பேன். நாட்டில் பிரசாரத்தால் நோய்களைக் குறைத்திடல் வேண்டும் என்பதே என் குறிக்கோள். பிரசாரத்தால் மட்டும் இது சாத்தியப்படாது. சுகாதார விதிகளையும் மீறிச் பல நோய்கள் காரணம் அறிய முடியாமல் ஏற்பட்டு விடுவதுமுண்டு. எடுத்துக்காட்டாகப் புற்றுநோயைக் குறிப்பிடலாம். இத்தகைய நோய்களுக்குச் சிகிச்சை அளித்திட வேண்டும். இதுவும் என் கடமையாகும். என் மருத்துவப் படிப்புப் பயன்பட வேண்டும். எனவே என் பணிகளை இரு வகையில் ஆற்றிட முற்படுவேன். ஒன்று அறிவுப்பணி, மற்றையது ஆக்கப்பணி. நான் அறிவாலும் தொண்டு செய்வேன். மருந்தாலும் தொண்டு செய்வேன்.

நான் நோயாளர்களுடன் அன்புடன் கதைத்து மருந்தளித்து அவர்களது நோய்களைக் குணமாக்க முற்படுவேன். இன்சொல் நல்ல மருத்துவம். நயமிகு கவனிப்பு. இவையே என் மருத்துவப் பணியின் ஆணிவேராகும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை உணர்த்திடும் மக்கள் மருத்துவனாக நான் செயற்படுவேன்.

**உ. நம்பியா**
**தரம் - 6**

**பொறுமை என்ற கவசத்தை எப்போதும் அணிந்து கொள்ளுங்கள்.**

# தமிழில் எண்களின் விந்தை

## எண் மூன்றில் அமைந்தவை

| | | |
|---|---|---|
| முக்கனி | - | மா, பலா, வாழை |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முப்பிணி | - | வாதம், பித்தம், சிலேத்துமம் |
| திரிகரணம் | - | மனம், வாக்கு, காயம் |
| முச்சுடர் | - | சூரியன், சந்திரன், அக்கினி |
| முத்தொழில் | - | படைத்தல், காத்தல், அழித்தல் |
| மும்மலம் | - | ஆணவம், கன்மம், மாயை |
| முப்பொருள் | - | பதி, பசு, பாசம் |
| முக்குற்றங்கள் | - | காமம், வெகுளி, மயக்கம் |
| மும்முரசு | - | வீரமுரசு, கொடைமுரசு, மங்களமுரசு |
| மும்மலர்கள் | - | பனம்பூ, அத்திப்பூ, வேப்பம்பூ |
| மூவிலச்சனை | - | வில், புலி, மீன் |

## எண் நான்கில் அமைந்தவை

| | | |
|---|---|---|
| நால்வகைப் பா | - | ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா |
| நால்வகைப் பூ | - | கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ |
| நானிலங்கள் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| நால் வர்ணத்தவர் | - | பிராமணர், சந்திரியர், வைசியர், சூத்திரர் |
| நாற்குணங்கள் (ஆண்கள்) | - | அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி |
| நாற்குணங்கள் (பெண்கள்) | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| நாற்படைகள் | - | தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாற்படை |
| நாற்பொருள் | - | அறம், பொருள், இன்பம், வீடு |

## எண் ஐந்தில் அமைந்தவை

| | | |
|---|---|---|
| பஞ்ச தோத்திரம் | - | தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் |
| பஞ்சாங்கம் | - | கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் |
| ஐம்புலன்கள் | - | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐங்குரவர் | - | அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தமையன் |
| ஐம்பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |

| | | |
|---|---|---|
| ஐம்பூதம் | - | நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் |
| ஐந்நிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பால் | - | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| ஐம்பெரும் காப்பியம் | - | சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி |
| ஐஞ்சிறு காப்பியம் | - | சூளாமணி, உதயகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீலகேசி |
| பஞ்ச பாண்டவர் | - | தருமர், வீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன் |
| பஞ்சமா பாதகங்கள் | - | கொலை, களவு, கள், சூது, காமம் |
| பஞ்சாமிர்தம் | - | சக்கரை, தயிர், தேன், நெல், பால் |
| பஞ்சாயுதங்கள் | - | சக்கரம், தண்டு, சங்கு, தனு, வாள் |
| பஞ்ச உலோகங்கள் | - | ஈயம், செப்பு, வெள்ளி, தங்கம், பித்தளை |

**கு.கஜாளன்**

**தரம் - 10B**

**எல்லா அனுபவங்களுமே கட்டடங்கள் அல்ல. கட்டடம் கட்டுவதற்கான அத்திவாரம் தான்.**

***- ஹென்றி ஆடம்ஸ்***

# உள்ளத்தனையது உயர்வு

இப்பூவுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் மனதிலே பல்வேறு எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருக்கின்றன. அவை நல்லவையாகவும் அவை அல்லாதவையாகவும் பல விதமாக அமையும். சிலருடைய எண்ணங்கள் சிறுவயது தொடக்கமே உன்னதமாகவும் உயர்வானதாகவும் அமைந்து விடுவதுண்டு. அவர்கள் தம் இலட்சியத்தினை அடைவதை யாரும் தடைபோட்டு விட முடியாது. அவர்கள் தான் நாம் இன்று போற்றுகின்ற உத்தமர்களாக, உதாரண புருஷர்களாக வலம் வந்தவர்கள், வலம் வருபவர்கள், வலம் வருவார்கள். வள்ளுவன், பாரதி, அப்துல்கலாம் போன்றோர் அத்தகையோரே. மாறாக எதுவித உன்னத எண்ணங்களும் இன்றி இருப்போர் சாதாரணமாகவும் தீய எண்ணங்கள் உடையோர் அனைவரும் வெறுத்து ஒதுக்கும் தன்மையுடையவர்களாக மட்டுமன்றி உலகிலே புறநடையான வர்களாகவும் சமூகத்திற்கே பெரும் சவாலாகவும் அமைந்து விடுவர். இதனால் தான் வள்ளுவப் பெருந்தகையும் "வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு" என்கிறார்.

அதாவது நீர்நிலைகளில் உள்ள நீரின் அளவுக் கூடிக் குறையும் அளவிற் கேற்ப தாமரை மலரின் தண்டு உயரும், தாழும். அது போன்றே ஒவ்வொருவருடைய உள்ளத்தில் உள்ள எண்ணங்களைப் பொறுத்தே அவர்களுடைய உயர்வும் அமையும். மனதை குப்பை கூளம் சேரும் குப்பைத் தொட்டிகளாய் அல்லாது நல்ல எண்ணங்களால் நிரப்புவோமானால் அவை நல்ல செயற்பாடுகளாக பரிமளித்து நிற்கும். எதை நீ எண்ணுகிறாயோ அதுவாகவே நீ மாறுகின்றாய் என்று வேதம் கூறுகிறது. சற்றே சிந்தித்துப் பாருங்கள். நம்மிலே பலர் தம் மனத்தை திருத்துவதை விடுத்து அழிந்து போகும் உடலையையும், தம்மால் திருத்த இயலாத சமூகத்தைத் திருத்தும் வேலையிலும் ஈடுபடுகின்றனர். 'உன்னை நீ திருத்து சமூகம் தானாகவே திருந்தும்' என்பது ஆன்றோர் வாக்கு. எமது மனத்தை முயற்சியுடன் ஒருமைப்படுத்தி தியானம், உடற்பயிற்சி முதலியவைகளால் திருத்த முடியும். அந்தத் தெளிந்த மனத்திலே உயர்ந்த உன்னதமான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். 'பாகற்கொட்டை போட சுரைக்காய் முளைப்பதில்லை' என்பது பழமொழி. அது போலவே உயர்வான இலட்சியங்களொடு கூடிய எண்ணங்களை நம் மனதிலே விதைப்போமானால் அனைவருக்கும் நற்பயனே விளையும் இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்கிறார்.

எண்ணங்கள் வலிமையானவை. காந்த சக்தியுடன் நாம் எண்ணும் எண்ணங்களின் வழி எம்மை அவை வழிநடத்திச் செல்லும் தன்மை உடையவை. மனதிலே உற்பத்தியாகும் எண்ணங்களே வாய்வழி சொற்களாகவும், அச்சொற்களே நற் செயற்பாடுகளாகவும் மிளிருகின்றன. அதாவது மனம், வாக்கு, காயம் எனப்படுகின்ற திரிகரணங்களும் சுத்தியாக இருக்குமானால் நாம் மேன்மையடைவது திண்ணம். 'மனம் போன்றே மாங்கல்யம்', 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளல்ல. அனுபவச் செழுமையால் விளைந்த உண்மை வார்த்தைகள். ஆகையால் மனதினை பண்படுத்தி நல்ல உயர்வான எண்ணங்களால் நிரப்பிக் கொள்வோம்.

மனதினை எம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது எம்மால் இயலக்கூடியதே. ஆயினும் ஐம்பெறிகளின் வழி அவை ஈர்க்கப்படுவதாலேயே மன ஒருமைப்பாடு சாத்தியப்படுவதில்லை. உடலை நாம் நினைத்தவாறு எம்மால் பெற்றுக் கொள்ள முடியுமா? அதாவது உயரம், அழகு, நிறம் என்பவற்றை மாற்றும் வல்லமை எம்மிடம் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் நம்மிற் பலர் திருத்தக்கூடிய மனதினை விடுத்து திருத்த கடினமான உடலையும், உலகினையும் திருத்த வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி விடுவார்கள். இது வேடிக்கைக்குரிய விடயமாகப்பட வில்லையா? இவை பற்றி டாக்டர் மு.வரதராசன் அவர்கள் மனவலிமை வேண்டும் என்ற கட்டுரையில் அருமையான கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். எனவே ஐம்பொறிகளின் வழி மனம் போகாதவாறு காத்து மனதைப் பண்படுத்தி ஒழுகின் எமது உயர்வை யாராலும் தடுத்துவிட முடியாது. சூரியனின் ஒளியை எமது கைகளால் மறைத்து விட முடியுமா? அது போன்ற செயல்தான் எமது மனதில் நல்ல எண்ணங்களை விதைத்து அறுவடை செய்வதை யாராலும் தடை செய்ய முடியாது. ஆகவே அனைவரும் குறிப்பாக மாணவர்களாகிய நாம் உயர்வான எண்ணங்களை மனதில் விதைத்து கல்வி, ஒழுக்கம் விழுமியப் பண்புகள் மிக்க நற் பிரஜைகளாக பயன்மிக்க வாழ்வு வாழ்வோம்.

**ஜெ.மிதுஷா**
**தரம் 7A**

# இலக்கிய விமர்சனம்

நேயர்களுக்கு வணக்கம்! ஒலிக்கும் தமிழ் நாதம் நிகழ்ச்சியில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பேருவகை அடைகின்றேன். வழமைபோல் இலக்கிய விமர்சன பகுதியில் பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றாகிய கலித்தொகையில் ஒரு செய்யுளையும் புதுக்கவிதையில் ஈழத்து கவிஞர்களில் ஒருவரின் கவிதை ஒன்றினையும் விமர்சிக்க வந்துள்ளேன்.

சங்க காலத்து இலக்கியங்களுள் கலித்தொகையும் ஒன்றாகும். சங்க நூல்கள் என்கின்ற எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகை ஆறாவது நூல். கலித்தொகை என்னும் கன்னித் தமிழ்நூல் இன்பச்சுவையை முதன்மையாகக் கொண்டது. கலித்தொகை நூலில் உள்ள பாடல்கள் சமுதாய வாழ்க்கையை - சமுதாயக் காதல் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. காதல் கதை நிகழ்ச்சிகள் யாவும் பெயர் குறிக்காது அமையப் பெற்றுள்ளன.

மக்களின் இயல்பான வாழ்வியலை இலங்கச் செய்பவை இக் கலியிலுள்ள செய்யுள்களாகும். எல்லாச் செய்யுள்களும் அக்காலத்து மக்களின் வாழ்வியலை ஓவியப்படுத்துவதன் மூலம் பிற்காலத்தவர் அறிந்து மகிழவும், புரிந்து கொள்ளவும் கருணையோடு செய்யப்பெற்ற உயிரோவியங்களாக உள்ளன. அன்பையும் ஆண்மையையும் பண்பையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழரின் நல்லற வாழ்க்கையை கலித்தொகைச் செய்யுள்களில் விரவியிருக்கக் காணலாம்.

கலித்தொகை செய்யுட்டொகுதியில் அமைந்துள்ள எட்டாவது செய்யுளான “பலவுறு நறுஞ்சாந்தும்...” என்னும் செய்யுள் விமர்சனத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இச் செய்யுளைப் பாடியவர் பெருங்கடுங்கோ, திணை - பாலை ஒழுக்கம் -உடன்போக்கு.

கருத்தொருமித்த காதலர் இருவர் பெற்றோர் எதிர்ப்பின் காரணமாக வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். தலைவியின் பிரிவைத் தாங்க முடியாத செவிலித்தாய் அவர்களைத் தேடிச் செல்கின்றாள். பாதையிலே தென்பட்ட அந்தணரிடம் அவர்களை பற்றி விசாரிக்கின்றாள். அந்தணரும் அவர்களைப் பற்றி செவிலித்தாயிடம் கூறுகின்ற வகையில் இச் செய்யுள் அமைகின்றது.

“பலவுறு நறுஞ்சாந்தும் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவை தாம் என் செய்ய
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!”

சீர்கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவை தாம் என் செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவை தாம் என் செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

நறுமணப் பொருள்கள் பலவற்றோடு சேர்ந்திருக்கும் சந்தணமானது அதை உடம்பில் பூசிக் கொள்பவர்க்குப் பயன்படுமேயல்லாமல் அது பிறந்த மலைக்கு அதனால் பயன் எதுவும் இல்லை.

கடலிலே பிறந்த முத்தானது அதை அணிந்து கொள்பவர்க்கு மட்டும் பயன்படுமேயல்லாமல் கடலுக்கு எந்த பயனையும் தரமாட்டாது.

ஏழு நரம்புகளை தடவி எழுப்பப்படும் இனிய இசையானது அவற்றை கேட்பவர்க்கு பயன்படுமே தவிர அந்த இசை பிறந்த இடமாகிய யாழுக்கு எந்த பயனையும் அளிப்பதில்லை. அது போலவே நன்கு சிந்தித்துப் பார்த்தால் உங்கள் மகளும் உங்களுக்கு பயன்பட மாட்டாள். நீங்களும் உங்கள் மகளால் பனயடைய முடியாது.

அவளை ஒத்த பருவமடைந்த அந்த ஆண் மகனுக்குத்தான் பயன்படுபவளாவாள். பெண்கள் பெற்றோர்கள் மீதுகாட்டும் பாசம் இல்லறக் கடமையை மேற்கொள்ளத் தொடங்கும் போது பின் நகர்ந்து சென்று விடுகிறது என்பதை இப் பாடல் நன்கு விளக்குகின்றது.

கவிஞர், கருத்தொருமித்த காதலர், பெற்றோர் எதிர்த்தால் அந்த எதிர்ப்பை மீறி இருவரும் வீட்டை விட்டு வெளியேறும் இயல்பான நிகழ்வை இலகுவான மொழிநடையில் எளிதாக விளங்கும் வண்ணம் செய்யுளைப் பாடியுள்ளார்.

இப்பாடலில் செவிலித்தாய் தன் வளர்ப்பு மகள் மீது கொண்ட அளவற்ற பாசம் புலப்படுத்தப்படுகின்றது. அவளின் பிரிவை தாங்க முடியாது தேடிச் செல்லும் வழியில் எதிரே வந்த அந்தணரிடம் மகளைப் பற்றி விசாரிப்பதையும் அழகுற வெளிப் படுத்துகின்றார் கவிஞர். செவிலித்தாயின் பாசத்தை கண்ட அந்தணர் அவளை தேற்றும் வகையில் பல்வேறு உவமைகளை கையாண்டு அவளைத் தேற்றுகின்றார்.

இலகுவான சொற் பிரயோகம், பெண் எப்போதும் தான் பிறந்த இடத்திற்கு பயன்தர மாட்டாள் என்ற விடயத்தை எளிய உவமைகளை எடுத்துக்காட்டி எளிதாக செவிலித்தாய்க்கு அந்தணர் புரிய வைப்பது போல வெளிப்படுத்தி காட்டியுள்ளார் கவிஞர்.

இச் செய்யுளில் கவிஞரின் கவித்துவமும் வாழ்வியல் தத்துவத்தை இலகுவாக செவிலித்தாய்க்கு உணர்த்துவதன் மூலம் செய்யுளை நயப்பவர்க்கும் இன்பச் சுவையை கொடுக்கும் கவிஞரின் கருத்தாழம் மிக்க செய்யுள் நயத்தற்குரியது எனலாம்.

அடுத்து நான் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்வது ஈழத்துக் கவிஞரான சில்லையூர் செல்வராஜன் அவர்களால் புனையப்பட்ட "சங்கெடுத்து ஊது தமிழ்ச்சாதி பெருஞ்சாதி..." என்னும் கவிதையாகும்.

தான்தோன்றிக் கவிராஜர் சில்லையூரான் செல்வராஜன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் சில்லையூர் செல்வராஜன் அவர்களால் சமுதாயத்தில் புரையோடிப் போன சாதிப் பிரச்சனையை மையமாகக் கொண்டு புனையப்பட்டதே இக் கவிதையாகும். மகாகவி உருத்திரமூர்த்தி இதே பிரச்சனையை மையமாகக் கொண்டு "தேரும் திங்களும்" என்ற கவிதையைப் படைத்தது போன்று இவரும் "சங்கெடுத்து ஊது தமிழ்ச் சாதி பெருஞ்சாதி..." என்ற இக் கவிதையைப் படைத்துள்ளார்.

உயர்ந்த ஜாதியென்றும் உயர்குலம் என்றும் பெருமை பேசி ஆலயங்களிலும் சிற்றூர்களிலும் சாதியென்ற பெயரினாலே சண்டையிடும் பெரியவர்கள் இந்தப் பூமியிலே நீதியென்ற ஒன்று இருக்கின்றது என்பதை அறியாது சண்டையிடுகின்றார்கள். இவ்வாறான சாதிக் கொடுமைக்கு பாரபட்சம் காட்டி வாழும் சாதிக் கொடுமைக்கு எப்போது முடிவுகாலம் வரும் என தனது ஏக்கத்தை முன்வைக்கின்றார் கவிஞர். இதன் மூலம் சமத்துவத்தை நிலைநாட்ட முனையும் கவிஞரின் ஆதங்கம் புலப்படுகின்றது.

ஆலயத்திலே வழிபடுவதற்கும் வீட்டிற்குள்ளே வருவதற்கும் தகுதியற்றவர்கள் என கந்தனையும் பூதனையும் வள்ளியையும் பொன்னியையும் ஒதுக்கி வைக்கின்றார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த தனபதி என்பவரின் ஒரே மகனுக்கு இங்கிலாந்து நாட்டில் கறுப்பினத்தவன் என்ற காரணத்தால் அவனை அவமரியாதை செய்து ஒதுக்கினால் அது பிழையான செயல் என விமர்சனம் செய்கின்றார்கள். இவர்கள் தாம் தொழில் ரீதியான ஏற்றத்தாழ்வு பார்ப்பதைச் சிந்திப்பதில்லை எனச் சாதித்திமிர் கொண்டவர்களைச் சாடுகின்றார் கவிஞர்.

உடல் வலிமை வாய்ந்த இளைஞன் ஒருவன் காலையிலும் மாலையிலும் பனையிலே ஏறி பானையைப் பிழந்து எடுத்து வருகின்ற கள்ளினை கடன் சொல்லி இரந்து வாங்கித் தங்கள் பெரிய வயிற்றிலே நிரப்புகின்ற பெரியவர்கள் பாதையிலும், சபைகளிலும் அந்த இளைஞனைக் கண்டால் அவனைக் கீழ்ச் சாதி என்று தூற்றி காறி உமிழ்ந்து அவனை ஒதுக்குகின்றார்கள். பேனும் பொடுகும் பிடித்திருக்கும் தலைமுடியையும் வாயிலிருந்து ஒழுகும் உமிழ் நீரிலே ஊறி பார்ப்பதற்கு அருவருப்பை ஏற்படுத்தும் தாடியையும் நீக்கி அழகாக அலங்காரம் செய்யக் கூடிய வகையில் சவரம் செய்யும் கலைஞனிடம் தலைதாழ்த்தி தம் கருமத்தை நிறைவேற்றி விட்டு அவன் போனதற்கு பின் அவனை கிழ் சாதி எனத் தூற்றுகின்றனர். கழிவகற்றும் தொழிலை மேற்கொண்டு நாளாந்தம் குப்பை கூளங்களையும் கால்வாய்களையும் அழுக்குகளையும் அகற்றிச் சுத்தம் செய்கின்ற தொழிலாளியை உதாசீனம் செய்து ஒதுக்கி அவன் தீண்டத் தகாதவன் என தூற்றுகின்ற எம்மவர்கள் தமிழ்ச்சாதி பெரும்சாதி எனப் பெருமை பேசுகின்றார்கள் என எள்ளி நகையாடுகின்றார் கவிஞர். தொழில்களைப் பரம்பரையாகச் செய்து வருபவர்களை ஒதுக்கி வைத்து

அவர்களுக்கு உரிமைகளை வழங்காது சமத்துவத்தைக் கொடாது நாம் தமிழர் நம் சாதி பெருஞ்சாதி என சங்கை எடுத்து ஊதுங்கள் என கிண்டல் செய்து சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முயலும் கவிஞரின் கற்பனை ஆழம் வியத்தற்குரியது.

இழிந்த சாதி என ஒதுக்குபவர்கள் அவர்கள் நடந்து செல்லும் பாதையிலேயே தாமும் நடந்து செல்கின்றார்கள். அவர்கள் சுவாசிக்கும் காற்றையே தாமும் சுவாசிக்கின்றார்கள். அவர்கள் தொழில் செய்து தொட்டு தமது உடல் வியர்வையுடன் கலந்து தருவதை இழிவு என்று ஒதுக்காமல் வாங்கி உண்கின்றார்கள். ஆனால் ஒரு பழிபாவமும் செய்யாத அவர்களை தமது சபை சந்திகளில் கண்டுவிட்டால் இழிந்தவர்கள் என ஒதுக்குவது எவ்வளவு அறியாமையான செயல் என சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டி அதனை மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு கவிஞர் இக் கவிதையைப் புனைந்துள்ளார். கவிமணி தேசிய விநாயகப் பிள்ளையவர்கள் "ஓடும் உதிரத்திலும் ஒழுகும் கண்ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ அப்பா..." எனப் பாடிய பாடலடிகளை நினைவூட்டுகின்றது. கவிஞரின் வரிகள் இலகுவான சொல்லாட்சி சமூக சீர்திருத்த சிந்தனையை விதைக்கும் கவித்துவம் எள்ளி நகையாடும் வகையில் அமைந்த வரிகள் அனைத்தும் கவிதையின் ஆழத்தையும் கவிஞரின் கவித்துவத்தையும் தெளிவாக விளக்கி நிற்கின்றது எனக்கூறி மீண்டும் சிறந்த கவிதை விமர்சனத்தோடு ஒலிக்கும் தமிழ் நாதம் உங்களை சந்திக்கும் வரை வணக்கம் கூறி விடைபெறும் நான் உங்கள் சாரங்கா வணக்கம் நேயர்களே.

செல்வி.பரமசாமி கஜனி
தரம் – 13 கலை

## நான் அறிந்த இலக்கியகர்த்தாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | கோப்பாய் சபாபதி நாவலர் | - | தமிழ் அறிஞர் |
| 02. | இருபாலை சேனாதீராமுதலியார் | - | தமிழ் அறிஞர் |
| 03. | பண்டிதர் கந்தையாபிள்ளை | - | தமிழ் அறிஞர் |
| 04. | சி.வை.தாமோதரம்பிள்ளை | - | தமிழ் அறிஞர் |
| 05. | சித்தாந்த பானு சோமசுந்தரக்குருக்கள் | - | சைவ சித்தாந்த ஆராச்சியாளர் |
| 06. | ஸ்ரீலஸ்ரீ - பரமசாமிக்குருக்கள் | - | சைவ சமய நூல் எழுத்தாளர் |
| 07. | திருமதி.யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | - | சிறுகதை, கட்டுரை |
| 08. | திரு.த.சட்டநாதன் | - | சிறுகதை, கவிதை |
| 09. | திரு.ப.சிவானந்தசர்மா | - | சிறுகதை, கவிதை, கட்டுரை |
| 10. | மலரன்னை | - | சிறுகதை |
| 11. | திருமதி.யசோதா முரளிதரன் | - | பாடலாக்கம், கவிதை, கட்டுரை |
| 12. | திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் | - | கட்டுரை, பாடலாக்கம் |
| 13. | திரு.சி.வை.குணசேகரம் | - | சிறுகதை, கட்டுரை |
| 14. | திருமதி.சௌதாமினி சாம்பசிவசர்மா | - | சிறுகதை, கட்டுரை |
| 15. | திரு.முருகேசு முரளிதரன் | - | சமயக்கட்டுரை, வாழ்த்துப்பா |
| 16. | சிவஸ்ரீ.தியாகராஜக் குருக்கள் | - | நூலாசிரியர் |
| 17. | திரு.மயூரகிரி சர்மா | - | நூலாசிரியர் |
| 18. | திரு.ஐ.சிவராசா | - | கவிதை, வாழ்த்தப்பா, கட்டுரை |
| 19. | கலாபூசணம் பரராசசிங்கம் | - | கவிதை, பாட்டு, நூலாசிரியர் |
| 20. | திரு.தியாகராசா வரதராஜன் | - | சிறுகதை, கவிதை |
| 21. | திரு.இராசேந்திரம் இராஜமகேந்திரன் | - | சிறுகதை, கட்டுரை |
| 22. | திருமதி .செம்மனச்செல்வி கேசிகன் | - | சிறுகதை, கட்டுரை |
| 23. | திருமதி.சரஸ்வதி கனகரத்தினம் | - | கவிதை, கட்டுரை |
| 24. | திருமதி.சிவசக்தி ஜெயராஜா | - | ஆங்கிலக் கவிதை, நாடகம் |
| 25. | திருமதி.நெல்லிநாதன் காயத்திரி | - | கவிதை |
| 26. | கோவைநந்தன் | - | சிறுகதை |
| 27. | தியாகராஜா ராஜராஜன் (கோமகன்) | - | சிறுகதை நேர்காணல் |
| 28. | திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் | - | கட்டுரை விமர்சனம் |
| 29. | நாவேந்தன் திருநாவுக்கரசு | - | சிறுகதை |
| 30. | திருமதி.இராஜினிதேவி சிவலிங்கம் | - | சிறுகதை, கவிதை, திறனாய்வு, கட்டுரை |

31. திருமதி.இராஜமனோகரி அருந்தவநாதன் - கவிதை, கட்டுரை
32. திரு.ஞானலிங்கம் ஆதவன் - கவிதை, கட்டுரை
33. செல்வன்.சிவராசா கௌதமன் - கவிதை, சிறுகதை, குறும்படக்கதை
34. திருமதி. ஜெயந்தி சிவானந்தம் - கவிதை, கட்டுரை
35. செல்வி.தாட்சாயினி சிவராசா - சிறுகதை, கவிதை
36. திரு.பொ.கேதீஸ்வரன் - பேச்சாளர்
37. செல்வி.யசோதா கண்ணன் - கவிதை
38. செல்வி.குயிலரசி முருகையா - கவிதை
39. புத்தூர் குகன் - கவிதை
40. வே.இளையகுட்டி - கவிதை, பாடலாக்கம்
41. திரு.பொ.சகலகலாநிதி - பாடலாக்கம்
42. திரு.ம.ரங்கநாதன் - கவிதை, கட்டுரை, பாடலாக்கம்
43. திருமதி.உமாதேவி பிறேம்குமார் - பாடலாக்கம், கவிதை

அ.யசோதா
கலைப்பிரிவு
2019

சில சமயங்களில் விடுதலை உணர்வின் வெளிச்சம் மங்கி இருக்கலாம். ஆனால், அதன் கீழே உள்ள நிலக்கரி குளிர்ந்து விட்டது என்று யாரும் நினைக்கக் கூடாது.

*– தொமாஸ் பெய்ன்*

# கடல் கடந்த பறவைகள்

கடல் கடந்த பறவைகள் நாங்கள்
தினம் கண்ணீர் விடும் பறவைகள்
தாய் தேசம் தள்ளி வந்து
தினம் தவிக்கின்ற பறவைகள்.

தாயவளின் பாசமில்லை
தாய்மொழிக்கோ மதிப்பில்லை
தோழனவன் தோள்களில்லை
துயரம் சொல்ல நாதியில்லை.

செல்வமீட்ட சென்றுள்ளான் என்று
சிலர் அங்கே சொல்லி விடலாம்
செத்து செத்து வாடும் வாழ்க்கை
சிலருக்கேனும் தெரிந்திடுமோ?

தந்தையின் கடனடைக்க
தாயுமானவள் நோயுடைக்க
தம்பியவன் மேல்படிக்க
தங்கையவள் மணமுடிக்க
பொறப்புக்கள் எல்லாம் பொறுப்பாய்
கையசைக்க
புலம் பெயர்ந்த பறவைகள் நாங்கள்

நோய்கள் வந்து நோகும் வேளை
நெஞ்சம் தொட கைகளில்லை
நினைவால் வரும் மழைக்கு மட்டும்
நித்தம் இங்கே பஞ்சமில்லை

மணம் முடித்த மறுநாளே மனையவளை
பிரிந்திட்டோம்
மழலை மொழி கேட்கவில்லை
மயக்கம் நடை பார்க்கவில்லை
தூரம் தந்த பிரிவினால்
துயரம் தானே எங்கள் பிள்ளை

காலங்கள் தொலைத்து வந்தோம்
கடமைகள் முடித்து வந்தோம்
கனவுகள் சுமந்து வந்தோம்
நினைவினில் மிதந்து வந்தோம்
தனிமையில் தவம் செய்து
தாய் மண்ணை தொட்டு நின்றோம்

குடும்பத்தோடு கொஞ்சி பேசி
கூடியிருந்த பொழுதொன்றில்
மனைவியவள் மொழியுரைத்தால்
மகனவனும் மேல் படிக்க
மகளவளும் மணமுடிக்க

மீண்டும் இதோ...
உயிர் மூச்சை பெரு மூச்சாய்
உள்ளிழுத்து செல்கின்றோம்
தாய் நாட்டின் நேசத்தையும்
தமிழ் மொழியின் வாசத்தையும்
இழந்து மீண்டும்
கனத்த மனதுடன் செல்கிறோம்...
இந்தக் கடமை முடியாதோ???

**கு.தர்சன்**
**தரம் - 11C**

பொறுமை சொர்க்கத்தின் திறவு கோல்.

# மூன்றாம் உலகப் போர்

இன்னும் சிலகாலம் தான்
கடந்து செல்ல வேண்டும்
மூன்றாம் உலகப் போருக்கு
யாவரும் தயாராகுங்கள்...!
அது

நிலத்திற்கான போரல்ல
பணத்திற்கான போரல்ல
நீதிக்கான போரல்ல
நம் உயிர் நிலைத்திருப்பதற்காக நடக்கும்
நீருக்கான போர்...!

இன்னும் சில காலம் தான்
காடுகள் யாவும்
காணாமல் போயிருக்கும்
கிணறுகள் எல்லாம்
உவர் நீராய் மாறியிருக்கும்...!

உலக நாடுகள் யாவும்
நன்நீருக்காக ஆயுதம் ஏந்தும்...!
பசுமை நிலமெல்லாம்
பாலை வனமாகும்
பயிர் செய்ய நீரின்றி சனம்
பட்டினியால் சாகும்...!

குடங்களுடன் மனிதக் கூட்டம்
அடிபட்டுச் சாகும்
உலக முதலாளிகள்
தாங்கள் வீட்டுக் கிணற்றைச் சுற்றி
இரும்புக் காவல் போடும்...!

ஒரு துளி நீர்
ஒரு லச்சத்துக்கு விற்பனையாகும்
சீதனமாக ஆண்கள்
நீரைக் கேட்பார்கள்...!

ஆழத் தோண்டினாலும்
ஆங்காங்கு மட்டுமே - நீர்
அமிர்தமாய் கிடைக்கும்
அதனால்...
நீர்க் கொள்ளையர்கள்
நாடெங்கும் உருவெடுப்பர்...!

“ரேசன்” காட்டுக்கு
ஆளுக்கொரு நீர்ப் போத்தல்
வழங்குவதாய் திட்டம் வரும்
அப்போது நான்
பவுண் போல் நீரைப் பாதுகாப்பார்கள்...!

ஆய்வு கூடங்களில்
அவசரம் அவசரமாக
செயற்கை நீர் தயாரிப்பார்கள்
ஆய்வுகள் நடக்கும்
நீரை மக்கள் வாங்குவதற்காக
வங்கியில் கடன் எடுப்பார்...

இறுதியாக ஒரு முறை இயற்கை
நீரைச் சுவைத்துப் பாருங்கள்
இது தான் நீரென

எங்கள் சந்ததிக்கு காட்ட
நீரை புகைப்படம் எடுத்து வையுங்கள்
ஓ...!

நீரின்றி இறப்போர் தொகை
நாளுக்கு நாள்...
ஆயிரங்களைத் தாண்டும்
ஆம்...!
நீரின்றி அழியப் போவது
மனித இனம் மட்டும் - அல்ல
இந்த உலகமும் தான்.

ஜெ.வானுஜா
11B

# முதியோரைப் பேணுவோம்

காரிருள் அகற்றி ஒளி உருவாக்கும்
கலங்கரை விளக்குகள் முதியோர்
அறிவுரைகள் சொல்லிக் கொடுத்தே
ஆனந்தமாய் வாழ வைப்பவர் அவரே

வாழ்க்கைக்கு வேண்டிய விழுமியங்களை
வகையாகச் சொல்லி வழி நடத்தி
ஆக்க இலக்கியம் படைப்பதற்கு
ஆளுமை தேவையென வலியுறுத்தியவரும் அவரே

நாட்டிற்கு நற்பணி பல செய்து
நலிவுற்று முதியோர் ஆன போது
இருகரம் நீட்டி வரவேற்று - முதியோர்
கடமையை சிரமேற் கொள்வோம்

சமுதாயத்தின் தடைகளை உடைத்து
சுதந்திரப் பயிரை தழைக்க வைத்து
துன்பத்தில் திழைத்த மக்கள் தனை
சுபீட்சமாய் வாழ வழி சமைத்தோர் முதியோரே

துன்புற்ற காலத்தில் துணையாய் இருந்து
துயர்துடைத்து நாட்டில் வளம் பெருக்கி
முதியோரிடம் பக்குவமாய் பண்புடன் பேசி
பார் புகழ வாழ்த்திடுவோம் மூத்தோர்களை.

**றஜிகரன் நிதுசன்**
**தரம்-8**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

# மாற்றம் காண்போம்

பாரதி அன்று புதுமை கண்டிட
பற்பல சூழ்ச்சி செய்தான் பாரினில்
பாவைகள் எம்மைப் பாரினில் உயர்த்திட
புரட்சிகள் செய்து புகழும் பெற்றான்

அடிமைத் தளையை வேரோடு அகற்றிட
ஆதிக்க வெறியை அழித்தும் ஈரித்திட
அறிவுப் பொக்கிசம் பெண்களைக் காத்திட
அன்பால் உலகை அரவணைத் தொழுகினான்

பட்டங்கள் பதவிகள் பலவற்றைப் பெற்றிட
பாரினில் அவரும் சமவாய்ப் பெய்திட
சட்டங்கள் செய்து சமாதானம் காத்திட
திட்டங்கள் போட்டு திட உறுதி பூண்டான்

பலகலை கற்றவர் பாரினில் உயர்ந்தார்
பதவிகள் பலவும் பெற்ற பான்மையில்
மற்றவர் தம்மை நசுக்க முயன்றார்
மானிடப் பண்பை அடியோடு மறந்தார்

தமக்கே எதுவும் பிறர்கது இல்லை
தான் மட்டும் வாழவே தந்தான் இறைவன்
என்றே எண்ணி இறுமார்ந்திருந்தார்
ஏற்றம் எதுவும் இவர்க்கோ இல்லை

தன்னைப் போல பிறரை எண்ணி
தரணி மீது பண்போடு வாழ்ந்தால்
எல்லா உயிரும் இன்புற்றுவாழும் - அவர்
ஏற்றம் பெற இறை அருள் கூடும்

பகுத்தறிவென்ற சிந்தையிலிருந்து
பாரிலுள்ளோர் பயனுடன் வாழ - தம்
எண்ணத் திருத்தி இறையது கடனென
எண்ணிச் செயற்படின் ஏற்றம் எமக்கே.

திருமதி.ஜெயந்தி சிவானந்தம்
ஆசிரியர்.

# சுயதேடலின் தேவை

வாழ்வென்ன சாவென்ன
வெற்றியென்ன தோல்வியென்ன
உயிரென்ன ஜடமென்ன
அனைத்திலும் சுயதேடல் வேண்டும்
அதுவே இவ்வுலகை அறிய வைக்கும்.

பூ மலரும் கணத்தினை அறிவதற்கும்
புல் விரியும் அழகை இரசிப்பதற்கும்
விண்ணிற்குச் செல்லும் ஆசையைத் தீர்ப்பதற்கும்
விட்டில் பூச்சியின் வாழ்வை அறிவதற்கும்
தேடலின் முயற்சி தீனியாக அமைகின்றது.

சுயமாகத் தேடுவதே சுவையாக அமைகின்றது
மகலனும் தான் மார்க்கோனியும் தான்
சுயதேடலினால் காலச்சுவடாக அமைகின்றனர்
காலம் காலமாக வாழும் மானிடம்
உய்வடைவது சுய தேடலினாலேயே.

தேடலினாலே அண்டத்தைக் கடக்கலாம்.
ஆகாயத்தைப் பிடிக்கலாம்
அணுவுக்குள்ளும் அணுவாகலாம்
அறிவுக்கு அறிவாகலாம்
தேடிப்பாருங்கள் தேவைக்கதிகமாகவே கிடைக்கும்.

தேடல் என்பது தேனை மயக்கும் போதையாகும் - அதிலே
தேர்ச்சி வரவேண்டுமானால்
அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் அவசியம் வேண்டும் - அப்போது தான்
புதிர் போடும் வாழ்க்கைப் பாதையில்
புரியாது பலவற்றை புரிந்து கொள்ளலாம்.

பூவுலகில் பிறந்ததிற்கு புதுமை செய்திட வேண்டும்
மானிடம் எடுத்ததிற்கு மாட்சி பல கண்டிட வேண்டும்
காலம் நம்மைக் கவர்ந்தாலும் காசினியில்
நாம் தடம் பதித்திட வேண்டும் - அதற்கு
சுயதேடல் துணை கொண்டால் சாதிப்பு திண்ணம்

சி.அபிநயா
11B

# தாய்மை

கர்ப்பத்தின் வலியோடு
தெய்வத்துடன் போராடி
நீ என்னை உயிராக்கி
உறவோடு சேர்த்தாயே
உலகத்தை நான் காண
உயிர்ப்பிச்சை தந்தாயே...
நான் நோயுற்றுப் போனால் - நீ
உயிரற்று இருப்பாயே
பந்தத்தையும், பாசத்தையும்
பரிமாற சொன்னாயே...
நேசத்தை சோறாக்கிப்
பொழிந்திட சொன்னாயே...
புண்பட்ட நெஞ்சை
இதமாக்கச் செய்தாயே
பண்புக்கு உயிர்கொடுத்த
உதாரணம் நீ தானே
பண்பாட்டை கற்றுத் தந்த
ஆசானும் நீ தானே
முன்னின்று பின்னின்று
என்னிழல் பார்த்தாலும்
கண்ணுக்குத் தெரிகின்ற
முழு தெய்வம் நீ தானே...

சி.தர்சிகா
தரம் - 12A கலை

# முதுமையின் விளிம்பில்

முயல் போல சுற்றித் திரிந்தேன் என் சகபாடிகளோடு
அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தால் யாருமில்லை இன்று என்னோடு
ஓடாத இடமில்லை, பார்க்காத பருவமில்லை
நடக்காத நடையில்லை, செய்யாத செயலில்லை
பெறாத அனுபவமில்லை, அடையாத தோல்வியுமில்லை
இந்நேரம் என்னோடு உரையாட ஒரு உயிருமில்லை.

கண்களிலே கண்ணீர் வழிய துடைக்க துடிக்கும் என் கரங்கள்
மறந்து ஏமாறுகிறது தன் கையின் பலவீனத்தை எண்ணி
பலரின் தனிமையை போக்கிய என் நாவுகள்
இன்று பேச யாரும் இல்லாமல் மனதிற்குள்ளே
பேசி அழுது குமுறும் நிலை யாருமில்லாததாலில்லை
பலர் என்னை சுற்றி இருந்தும் நான் உணரும் தனிமையினால்

கடமையை கண்ணியமாக செய்யும் என் மகன்
வேறு வழியில்லாமல் பணிவிடை செய்யும் மருமகள்
பொம்மையோடு விளையாடுவது போல
என்னோடு விளையாடும் என் பேரப்பிள்ளைகள்
யாரும் அறியாரே என் கடந்த கால இளமையை
சொன்னாலும் புரியாது நான் பெற்ற அனுபவங்களை

முற்காலத்தில் முதியவர்க்கு கொடுத்த முக்கியத்தும்
அவர்களுக்கென்று கூடும் சபையில் இருந்த தனித்துவம்
கண்ணுக்கு புலப்படும் தெய்வமாக மதித்த பெரியோர்
காலத்தின் கோலத்தினால் அடைந்தனரோ இந்நிலை
காலம் மாற மனித குணங்களும் மாற
திறமைகள் புதைக்கப்பட்டு தேகம் மட்டும் பூமிக்கு பாரமாகியதே

சுருங்கி போன என் தேகத்தினுள்
படர்ந்து விரிந்த திறமைகள்
உடல் மட்டுமே முதிர்வடைந்த நிலையில்
என் மனமும் திறமையும் முதுமை பெறாததை யார் அறிவார்?
முதியவருக்காக எழும் குரல் நான் கேட்க மாட்டேனோ
இறைவா இன்று அக்குரலாய் நீ வரமாட்டாயோ?

ரூ.ஏஞ்சலா சஜனி
தரம் - 13.A கலை

# மூன்றெழுத்து

அம்மா என்பது மூன்றெழுத்து
அவள் காட்டும் அன்பு மூன்றெழுத்து
அப்பா என்ற மூன்றெழுத்து
அவர் புகட்டும் அறிவு மூன்றெழுத்து
பள்ளி என்பது மூன்றெழுத்து
அங்கு செல்லும் பிள்ளை மூன்றெழுத்து
ஆசான் என்ற மூன்றெழுத்து
அவர் கற்றுக் கொடுக்கும் கல்வி மூன்றெழுத்து
அன்பு என்ற மூன்றெழுத்து
அதைக் காட்டும் உறவு மூன்றெழுத்து
நட்பு என்ற மூன்றெழுத்து
நட்பில் அன்பு மூன்றெழுத்து
இதயம் என்ற மூன்றெழுத்து
அதில் தோன்றும் காதல் மூன்றெழுத்து
பிரிவு என்ற மூன்றெழுத்து
அதனால் ஏற்படும் துயர் மூன்றெழுத்து
வாழ்வு என்ற மூன்றெழுத்து
அதில் எமக்கு கிடைக்கும் வெற்றி, தோல்வி மூன்றெழுத்து
மறைவு என்ற மூன்றெழுத்து
இறுதியில் நாம் செல்லும் சுடலையும் மூன்றெழுத்து.

பி.கோபிகா
13A

# உன் கண்ணில் நீர் வழிந்தால்...

பாடசாலை ஆரம்பிப்பதற்கான முதல் மணி ஒலித்து விட்டது. மாணவர்கள் அனைவரும் காலைப் பிரார்த்தனைக்கு மைதானத்திற்குச் செல்வதற்குத் தயாராக வரிசையாக நின்றனர்.

அடுத்த மணியொலி கேட்டதும் ஒழுங்காக அவர்கள் காலைப் பிரார்த்தனைக்குச் செல்ல வேண்டும். வரிசையாக நிற்கும் தத்தமது வகுப்பு மாணவர்களை வகுப்பாசிரியர்கள் அவதானித்துக் கொண்டு நின்றனர்.

தரம் 6A வகுப்பிற்கு புதிதாக இடமாற்றம் பெற்று வந்த ரோகினி வகுப்பாசிரியர். அவர் இந்தப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்து இரு வாரங்கள் கூட நிறையவில்லை. மாணவர்களை எதற்கெடுத்தாலும் கண்டிப்பது அவரின் இயல்பாக இருந்தது.

நான் இதுவரை வகுப்பாசிரியராக இருந்த 6A வகுப்பை ரோகினி ஆசிரியரிடமும் எமது பாடசாலையிலிருந்து சுகயீன விடுமுறையில் நிற்கும் மஞ்சுளா ஆசிரியரின் தரம் 8 வகுப்பாசிரியராக என்னையும் கடமையாற்றுமாறு நேரசூசி வழங்கப்பட்டிருந்தது.

எனது வகுப்பு மாணவர்களுக்கு நான் வேறு வகுப்பிற்குச் செல்வதில் உடன்பாடில்லை. "ரீச்சர் நீங்கள் எங்களை விட்டிட்டு போகாதேங்கோ வேணுமெண்டா ரோகினி ரீச்சரை அந்த வகுப்புக்கு அனுப்புங்கோ..." மாணவர்களின் கெஞ்சலை கேட்டு மனம் வேதனை அடைந்தாலும் நிர்வாகத்தின் முடிவிற்குக் கட்டுப்பட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

எனக்குப் புதிதாகத் தந்த வகுப்பு மாணவர்களை அவதானித்தாலும் எனது கவனம் தரம் 6A வகுப்பிலே சென்றதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தனது வகுப்பு மாணவர்களின் வரிசையை அவதானித்த ரோகினி ரீச்சர் ஒரு மாணவியின் காதைத் திருகி "வெளியில வா உன்னை புதுச் சப்பாத்து வாங்கச் சொன்னனான் இண்டைக்கும் பிரிஞ்ச சப்பாத்தோட வந்திருக்கிறாய் நீ பிறயருக்கு போக வேண்டாம்..." அவரின் கத்தலில் மாணவர்கள் அனைவரும் செயலற்று நின்றனர்.

அடுத்த மணியொலி கேட்டதும் மாணவர்கள் வரிசையாக மைதானத்திற்கு விரைந்தனர். ஒரு மாணவி மட்டும் பிரார்த்தனைக்கு செல்லாது நிற்பதைக் கண்டு அந்த மாணவி யாரென அறிவதற்காக அருகில் சென்றேன்.

கண்களில் கண்ணீர் பெருக முகத்தை இரு கரங்களாலும் மூடிக் கொண்டிருக்கும் அந்தப் பிஞ்சின் கைகளை நீக்கி விட்டுப் பார்த்தேன். அவள் வேறு யாருமல்ல. வகுப்பிலே முதலாவது மாணவியாக வரும் கவிப்பிரியாதான்.

என்னைக் கண்டதும் "ரீச்சர் என்ர சப்பாத்துப் பிஞ்சு போச்சுது ரீச்சர். அப்பாவுக்கு இரண்டு கிழமையா காய்ச்சல் அவர் பெரியாஸ்பத்திரியில இருக்கிறார். அதுதான் அம்மா வாற கிழமை சப்பாத்து வாங்கித் தாறதாய் சொன்னவ ரீச்சர்..." விம்மி அழும் அவளின் தலையைத் தடவி "கவி... அப்பாவிற்கு சுகமில்லை எண்ட விஷயத்தை ரீச்சரிட்ட சொன்னனியா..." நான் கேட்டதும் "ரீச்சர்... அவ நான் சொன்ன கதையை கேட்கவே இல்லை ரீச்சர். சப்பாத்து போட்டுக் கொண்டுவரேல எண்டா வகுப்பிற்கு வர வேண்டாமாம்..."

கவிப்பிரியா எனது வகுப்பில் உள்ள மாணவர்களில் சுறுசுறுப்பும் திறமைசாலியுமான மாணவி. அவளது தந்தை கூலி வேலைக்குச் சென்றே தனது மகளைப் படிக்க வைக்கின்றார் என்பது எனக்குத் தெரியும்.

பெற்றோர் சந்திப்பின் போது அவர் என்னிடம் "ரீச்சர் நான் கூலி வேலை செய்தாவது என்ரை பிள்ளையை நல்லாப் படிப்பிக்க வேணும் அவளை நீங்கள் கவனியுங்கோ..." என்று கூறுவது வழக்கம்.

வகுப்பாசிரியர் என்ற வகையில் மாணவர்கள் அனைவரின் குடும்பச் சூழ்நிலை பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தேன்.

கவிப்பிரியாவைத் தேற்றிய நான் "கவி.... ரீச்சர் எல்லாப் பிள்ளையளும் ஒழுங்கா, வடிவா வரவேணும் எண்ட நல்ல நோக்கத்தோடதான் உன்னைக் கண்டிருச்சிருக்கிறா. நீ அவவை பிழையாக நினைக்கக்குடாது..." என்று கூறிய நான் ரோகினி ரீச்சரைத் தேடிச் சென்றேன்.

ஆசிரியர் தங்கும் அறையை நோக்கிச் சென்ற அவரை இடைமறித்து “ரீச்சர்... கவிப்பிரியா கெட்டிக்காரப் பிள்ளை ஒரு நாளும் பிழைவிடமாட்டா. தகப்பன் சுகமில்லாம கொஸ்பிற்றலில இருக்கிறாராம். அந்தப் பிள்ளை கஷ்ரப்பட்ட பிள்ளை. அவவை மன்னிச்சு வகுப்புக்கு விடுங்கோ...” என்னை இடைமறித்த ரோகினி ரீச்சர்.

“ரீச்சர்... நீங்கள் என்ர வகுப்பு விஷயத்தில தலையிடாதேங்கோ, நீங்கள் அந்தப் பிள்ளையளுக்குச் செல்லம் குடுத்துக் கெடுத்துப் போட்டியள். நான் நீங்கள் சொன்னதுக்காக கவிப்பிரியாவை வகுப்புக்கு விட்டா ஒரு பிள்ளையளும் என்ரை சொல்லை கேட்க மாட்டினம். நீங்கள் உங்களுக்குத் தந்த வேலையை மட்டும் பாருங்கோ...” படபடப்பாக பேசிய ரோகினி ரீச்சர் ஆசிரியர் ஓய்வறைக்குள் நுழைந்து விட்டார்.

விக்கித்து ஒரு கணம் செயலற்று நின்ற நான் எனது வகுப்பறையை நோக்கி நடக்கின்றேன். இன்று மாலை கடையிலே கவிப்பிரியாவிற்கு அளவான சப்பாத்து ஒன்றை வாங்க வேண்டும். அதை அவளது வீட்டிற்குச் சென்று கொடுக்க வேண்டும் என்ற உறுதியான மனதுடன் சென்ற என் மனதில் அவளது கண்ணீர் தோய்ந்த முகமே நிழலாடியது.

**திருமதி.இராஜினிதேவி சிவலிங்கம்**
**பிரதி அதிபர்**

# துடிப்பின் எல்லை

பட்டமளிப்பு விழாவிற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்த ராதாவின் மனதில் திடீரென ஒரு நினைவு ஊடுருவ யன்னல் அருகே சென்று தலையை சாய்த்து ஏதோ யோசித்தவளாய் வீதியை நோக்கிய வண்ணம் நின்றாள்.

ராதாவை கூட்டிச்செல்ல அங்கே வந்த யமுனா ராதாவின் அருகே சென்று அவள் தோளருகே கை வைத்து அவளை நோக்கி "நேரம் ஆகி விட்டது நீ இன்னம் தயாராகாமல் என்ன யோசிக்கிறாய்" என்று கேட்டாள். ராதா "என்னவோ தெரியவில்லை திடீரென அண்ணாவின் ஞாபகம் தான் வேறொன்றும் இல்லை" என்றாள். இலங்கை தலைநகரமாகிய கொழும்புக் கோட்டையில் கொச்சிக்கடை பிரதேசத்தில் பத்மாதேவிக்கும், அன்ரனிப்பிள்ளைக்கும் இளையவளாக ராதா பிறந்தவள். அவளுக்கு ஜெகதீஸ் மட்டுமே அண்ணன் எனச் சொல்வதற்கு சகோதரனாக இருந்தான். இவர்கள் குடும்பம் சிறு வயதில் இருந்தே ஒருவருக்கொருவர் பாசமாக இருந்தனர்.

ஜெகதீஸனுக்கு 16 வயதாக இருக்கும் போது ஒரு விபத்தில் இவர்கள் இருவரும் தங்கள் பெற்றோரை இழந்தனர். அப்போது ராதாவிற்கு 7 வயது தங்கள் பெற்றோரை இழந்த இருவரும் யாருடைய துணையும் இன்றி மிகவும் கஷ்டப்பட்டனர். இவர்களின் நிலைமையை புரிந்து கொண்ட ஜெகதிஸின் நண்பனான விமலின் பெற்றோர் இவர்கள் இருவரையும் தமது பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டு பாசமாக வளர்த்தனர்.

ஜெகதிஸ் 18 வயதை பூர்த்தி செய்தவுடன் விமலுடன் சேர்ந்து வேலை ஒன்றிற்கு செல்ல ஆசைப்பட்டான். தனது தங்கையை தனது பெற்றோர் ஆசைப்பட்டதைப் போல பொறியியலாளராக ஆக்குவதே அவனது கனவாக இருந்தது. ராதாவும் தனது பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தாள். அதனால் ஜெகதிஸ் விமலுடைய பெற்றோரின் உதவியின்படி சிறிய வேலை ஒன்றிற்கு சென்று தனது தங்கையின் படிப்பிற்கான செலவுகளை சரிவர செய்து வந்தான். அவளும் நன்றாக படித்து வந்தாள்.

சிறு வயதில் பெற்றோரின் பாசத்தை இழந்த ராதாவிற்கு தனது அண்ணனின் பாசமும், அரவணைப்பும் தனது குறிக்கோளை நிறைவேற்ற ஊன்று கோலாய்

இருந்தது. நன்கு படித்து வந்தாள். எல்லா பரீட்சையிலும் முதலிடம் பெற்றாள். 28 வயதை எட்டிய ஜெகதிஸிற்கு திடீரென வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்தது. தங்கையைப் பிரித்து வெளிநாடு செல்ல விரும்பாத ஜெகதிஸ் தனது தங்கையின் படிப்பு செலவிற்கு இங்கு சம்பாதிக்கும் பணம் போதாமையால் வேறு வழியேதுமின்றி வெளிநாடு செல்ல புறப்பட்டான். ராதா எவ்வளவோ சொல்லியும் கேட்காத ஜெகதிஸ் "உன்னை விமலும் அவனுடைய பெற்றோரும் நன்கு பார்த்துக் கொள்வார்கள். அண்ணா உன்னைப் பொறியியலாளராக பார்க்க வேண்டும். நீ நன்றாக படிக்க வேண்டும்" என அவளை சமாதானப்படுத்தி வெளிநாடு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டான்.

ஒரு நாள் விமலின் பெற்றோர் ஜெகதிஸிடம் "ராதாவை விமலுக்கு திருமணம் செய்ய ஆசைப்படுறம் உனது விருப்பம் என்ன..." எனக் கேட்டனர். அதற்கு ஜெகதிஸ் எனது தங்கையின் விருப்பமே. எனது விருப்பமும் நீங்கள் ராதாவை கேளுங்கள் என சொல்லி ராதாவின் விருப்பத்துடன் விமலுக்கும், ராதாவுக்கும் நிச்சயம் பண்ணி விட்டு வெளிநாடு புறப்பட்டான். ராதாவின் தேவைகளை சரிவர நிறைவேற்றி அவனது வாழ்வின் கடைசி நாள் அன்று தான் என்பது தெரியவில்லை.

எல்லோருக்கும் பயணம் தெரிவித்து விட்டு விமான நிலையத்திற்கு வந்தான். விமானம் புறப்படுமுன் ராதாவோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கடைசியாக பேசியது "ராதா நான் போட்டு வாறன், சந்தோஷமா இரு விமானம் புறப்பட போகுது. நீ நல்லா படிக்கனும், பொறியியலாளர் ஆகனும். இது தான் எங்கட பெற்றோருடைய விருப்பமும், என்ர விருப்பமும் இத நீ நிறைவேற்றனும்" எனக் கூறி தொலைபேசியை துண்டித்து விட்டான். விமானம் புறப்பட்டு சற்று நேரத்தில் ராதாவிற்கு போண் வந்தது. ஜெகதிஸ் பயணித்த விமானம் விபத்துக்குள்ளாகியதில் ஜெகதிஸ் இறந்து விட்டான் என்பதே அந்த போண் மூலம் அவளுக்கு கிடைத்த செய்தி.

தன்னுடைய 7 வயதிலே பெற்றோரை இழந்து ஜெகதிஸின் அரவணைப்பில் வாழ்ந்து வந்து ராதாவுக்கு இச் செய்தியை கேட்டதும் அதிர்ச்சியில் உறைந்தவள் நம்ப முடியாமல் மயக்கமுற்று சாய்ந்தாள். ஒரு சில நிமிடங்களில் சுய நினைவுக்கு வந்த ராதா தன்னைச் சுற்றிலும் விமலும் அவனது பெற்றோர்களும் ஜெகதிஸின் நண்பர்களும் கவலை தோய்ந்த முகத்துடன் நிற்பதைக் கண்டதும் கண்களில் இருந்து கண்ணீர் பீறிட்டு வந்ததும் "விம்மி விம்மி" அழ ஆரம்பித்தாள்.

அவளை சமாதானப்படுத்த எவ்வளவோ முயற்சி செய்தும் விமல் அவளை சமாதானப்படுத்தும் முயற்சியில் தோல்வியையே கண்டான். ராதா ஜெகதிஸின் உடலை பார்க்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தாள். ஆனால் அவளது பரிதாப நிலை அவனது உடலை பார்க்க முடியாமல் போயிற்று.

ஜெகதிஸின் உடல் இல்லாது அவனது மரணச் சடங்கை விமலின் பெற்றோர் சரிவர நிறைவேற்றி வைத்தனர். தனது அண்ணனின் நினைவுகள் அவளை ஓரிரு மாதங்கள் பாடாய் படுத்தியது. எதைப் பார்த்தாலும் தன் அண்ணனின் ஞாபகங்கள், அவளை வளர்த்த விதங்கள் என்பன அவள் மனதை தாக்கிக் கொண்டே இருந்தது. பின்னர் ராதா ஓரளவிற்கு தன்னை பழைய வாழ்க்கைக்குள் கொண்டு செல்ல முயற்சித்தாள்.

தனது பெற்றோரினதும், அண்ணனினதும் ஆசையை நிறைவேற்ற பல முயற்சிகள் செய்து நன்கு படித்து பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான அனைத்து செலவுகளையும் விமலும், அவனது பெற்றோரும் பொறுப்பெற்றனர்.

பல்கலையில் படித்து இன்று பட்டமளிப்பு விழாவிற்கு தயாராகும் ராதாவிற்கு எல்லையற்ற சந்தோஷம் தனது பெற்றோரினதும், அண்ணனினதும் ஆசையை நிறைவேற்றி விட்டேன் என்று, ஆனால் அண்ணனின் பிரிவும் அவன் தனது பட்டமளிப்பு விழாவினைப் பார்க்க உயிரோடு இல்லையே என்ற ஏக்கத்தோடும் தனது அண்ணனின் நினைவலைகளிலிருந்து திடீரென திடுக்கிட்டவளின் கண்களிலே நீர்கசிய, உதட்டிலே சிறு புன்னகையோடும் பெருமிதத்தோடும் புறப்படுகின்றாள்.

**முற்றும்.**

அ.பவுஸ்ரனா
தரம் - 12 கலை

## தாய்

உயிர் எழுத்தில் 'அ' எடுத்து
மெய் எழுத்தும் 'ம்' எடுத்து
உயிர் மெய் எழுத்தில் 'மா' எடுத்து
அழகு தமிழில் கோர்த்தெடுத்த முத்து 'அம்மா'

உன்னை விட்டு எத்தனை உறவுகள்
மதிக்காமல் சென்றாலும்
உன் உணர்வுகளுக்கு மதிப்பளித்து
உன் கண்ணீரை துடைப்பவள் தான் அம்மா

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட
இருந்தாலும் அன்னையே உன்னைப் போன்று
அன்பு செய்ய யாரும் இல்லை
இவ்வுலகில் எனக்காக

இரத்தமும் சதையும் ஒன்றாய் உருட்டி
பிசைந்து உணர்வையும் உயிரையும்
உள் அனுப்பி என்னை
பத்து மாதம் சுமந்தெடுத்து தாயானாள்
அவளே என் சொர்க்கம் - அம்மா!

மறு ஜென்மம் ஒன்று இருந்தால் உன்னை
என் மகளாக சுமக்க வேண்டும்
என்னை சுமந்த அவளை
ஒரு முறையாவது நான் சுமப்பதற்காக.

ர.சாதுஜா
10 B

# அற்புதமான கலை ஓவியம்.....!!!

"விஜய் விஜய்!!" அம்மா கூப்பிடும் சப்தம் கேட்டது. ஆனால் பதில் கூறும் மனநிலையில் அவன் இல்லை. சற்று நேரத்தில் "ஏன்டா! என்ன பண்றே? கூப்பிடறது கேட்கலே? காது செவிடா?" அம்மா கத்த ஆரம்பித்தாள். சற்று தலையை தூக்கிப் பார்த்தான். தரையில் ஒரு காகிதத்தில் வரைந்து கொண்டிருந்தான். அம்மா "ஏய் என்னடா கிறிக்கிக் கொண்டிருக்கே? நாளைக்கு பரீட்சை ஞாபகம் இல்லையா?" பதில் எதுவும் வரவில்லை. அவன் வரைந்த பிள்ளையார் படத்தில் தும்பிக்கை சரி இல்லை... அதை எப்படி மாற்றுவது என்று யோசித்தான்.

கோபம் வந்தது அம்மாவிற்கு. கீழ இருந்த காகிதத்தை எடுத்தாள். அவளைப் பொருத்தமட்டில் அது கிறுக்கல் தான்... கசக்கி கீழ போட்டாள்.... வேகமாகச் சென்று விட்டாள்... அழுகை வந்தது விஜய் இற்கு...

மற்றொருநாள்..... பள்ளியில் ஓவியப்போட்டி என்று சொன்னதால் விஜய்யிற்கு உற்சாகம். தானும் கலந்து கொள்ள முற்பட்டான். அம்மா திட்டுவாள் என்ற பயம் மட்டும் மனதில் ஒட்டிக் கொண்டிருந்தது. அவளை குறை சொல்வதற்கில்லை. கணவன் இறந்ததும் இவனை ஆளாக்க அவள் வீட்டு வேலை செய்ய ஆரம்பித்தாள். கிடைக்கும் வருமானத்தில் இவனை படிக்கவும் வைக்கிறாள். ஆனால் விஜய்யிற்கு படிப்பில் ஈடுபாடு இல்லை... ஓவியத்தில் தான்... வெளியில் சொன்னால் அம்மா திட்டுவாள். சமயத்தில் அடிக்கவும் செய்வாள். "என்ன செய்ய? மனம் தவித்தது... இரண்டு நாள் கழித்து பள்ளியில் சோகமாய் உட்கார்ந்திருந்தான் அவன். கணக்கு வாத்தியார் இவனைப் பார்த்து "விஜய்! என்ன ஒரு மாதிரி இருக்கே?" என்றார்... சார்... எனக்கு படிக்கிறதிலே இஷ்டம் இல்லை. ஓவியம் வரைய நிறைய ஆசையா இருக்கு நல்லாவும் வரைவேன் என்றான்... இதைக் கேட்டதும் வாத்தியார் ஆச்சரியப்பட்டார். "நல்லது தானே ஏன் அதற்கு சோகமா இருக்கே?" எங்க அம்மா திட்டுவா! கிறுக்காதேனு சொல்வா" என்றான்... குழந்தைத்தனமாக. வாத்தியாருக்கு வருத்தமாய் இருந்தது.

"எங்கே நீ வரைந்த ஏதாவது ஒன்று காண்பி என்றார்". "பல் எல்லாம் தெரிய" இதோ! பாருங்க என்று தன் புத்தகத்தில் வரைந்த மயில் படத்தை காண்பித்தான். அதை வாங்கிப் பார்த்தவர். ஆச்சரியத்தில் புருவங்களை உயர்த்தினார்... "நல்லா

இருக்கே! அற்புதம்! உனக்கு திறமை இருக்கு. எதிர்காலத்தில் நீ சிறந்த ஓவியனாய் வருவாய். நான் உன் அம்மாவிடம் பேசுறேன். பள்ளி முடிந்ததும் வரேன் உன் வீட்டிற்கு'' என்றார். "உம்ம்... அப்படியா? சந்தோசம் அவன் முகத்தில்.

மாலை 4.30 மணி அளவில் அவர் விஜய்யுடன் அம்மாவைப் பார்க்கச் சென்றார். "அம்மா! விஜய் நல்லா வரையறான். அவனை ஊக்குவித்தால் எதிர்காலத்தில் பெரிய ஓவியனாய் வருவான்'' என்றார். "என்ன சார்... இங்க மூனு வேளை சாப்பிடவே நான் நாய்படாப்பாடுபடறேன். நீங்க வரையறதைப் பற்றி பேசறீங்க...!! ஓட்டாமல் பேசினாள். "இல்லை நீங்க கொஞ்சம் யோசிங்க... அவன் முடிந்த வரைக்கும் படிக்கட்டும் அதற்கான செலவை பள்ளி ஏற்றுக் கொள்ளும். நான் அதற்கு பொறுப்பு நீங்கள் அவன் வரையறதுக்கு தடை சொல்லாமல் இருங்கள்'' என்றார். "என்னவோ செய்யட்டும் மனமில்லாமல் சொன்னாள்..." விஜய் சந்தோஷ காற்றில் மிதந்தான். இனி கவலை இல்லை.

வரைந்தான்... வரைந்தான்... தாகம், பசி மறந்து வரைந்தான். ஓவியப் போட்டிகளில் வெற்றி கண்டான். இன்று... அவன் பெரிய ஓவியன்... பெருமிதமாய் இன்று ஒரு கலை மேடையில் அவனுக்கு சிறந்த ஓவியன் என்ற பட்டம். அம்மா கண் கலங்கி பார்த்து மகிழ்ந்தாள்.

**சு.சங்கீர்த்தனா**

**11C**

# கனவு (சிறுகதை)

கோயில் மணி ஒலிக்க, சேவல் அதிகாலை விடிவுக்கான அடையாளத்தை தெரியப்படுத்த, காவ்யா பரபரப்பாக கட்டிலில் இருந்து எழுந்தாள். மனதில் எத்தனையோ எதிர்காலக் கனவுகளுடன் நான் நிச்சயமாக எதிர்காலத்தில் வைத்தியராக வருவேன் என்ற நினைப்புடன் முகத்தினை கழுவி விட்டு கடவுளை கும்பிட்டு மேசையில் அமர்ந்து தான் படித்தவற்றை ஞாபகப்படுத்தினாள். இன்று காலை எட்டு முப்பது மணிக்கு கடைசிப் பரீட்சை இரண்டு பாடங்களிலும் திருப்தியாக செய்தேன். மூன்றாம் பாடம் மிக நேர்த்தியாகச் செய்ய வேண்டும் என்று கற்றவற்றை ஞாபகப்படுத்திய முழுத்திருப்தியுடனும் தாய் தந்தையின் ஆசியுடனும் சகோதரிகள் நால்வரினது அன்புடனும் வீட்டில் இருந்து பரீட்சை நிலையம் நோக்கி புறப்பட்டாள். நான் சிறந்த வைத்தியராக வந்து நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும். பணத்திற்காக சேவையை விற்காமல் உயிர்காக்கும் உன்னத தொழில் வைத்தியத்தினை சிறப்பாகச் செய்ய வேண்டும். என்ற திடத்துடன் பரீட்சை எழுதினாள்.

வீட்டில் கஷ்டம் என்பதால் சீதனம் கொடுத்து கல்யாணம் கட்டி வைக்க முடியாது. வெளிநாட்டு மாப்பிளைக்கு காவ்யாவை பிடித்திருப்பதால் சீதனம் எதுவும் வேண்டாம் எனக்கேட்டு ஒற்றைக்காலில் நிற்கின்றார். கல்யாணம் முடிந்ததும் காவ்யா வெளிநாடு போயிடுவாள். அவள் வெளிநாடு போனா எங்கட குடும்பமும் ஊரில் தலை நிமிர்ந்து நடக்கும் என காவ்யாவின் தந்தை அவளது தங்கைமார்களுக்கு கூறிக்கொண்டு இருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த காவ்யாவுக்கு இடியே விழுந்தது போலிருந்தது. இருந்தும் தங்கைகளின் வாழ்வு அவள் முன் நிழலாடியது. புதிய சேலையைக் கட்டிக் கொண்டு மனதில் அழுதவளாய், வெளியில் சிரித்தவளாய் முகத்தினை காட்சிப்படுத்தி மாப்பிள்ளை முன் தன் முகம் காட்ட தயாராக நின்றாள். மாப்பிள்ளைக்கு அவளை பிடித்து போக எதிர்கால வைத்தியராகும் கனவு சுக்கு நூறாகிப் போக திருமணமும் நடந்தேறியது. திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் மாப்பிள்ளை வெளிநாட்டுக்கு பறந்து போக அவள் விசாவுக்காக காத்திருந்தாள். நித்தியாவின் தாய் “என்ன செய்யிறது எம்மைப்போல கஷ்டப்பட்டவர்களுக்கு மாப்பிள்ளை கிடைக்கும் போது தான் கல்யாணம் செய்ய முடியும். இலட்சியம், கனவு என்றிருந்தால் அதையெல்லாம் இந்நொடியிலே மனதிலிருந்து அழித்து விடவேண்டும் எனக் கவலையாகக் கூறினாள்.

நாட்கள் விரைவாக கடந்து செல்ல பரீட்சை பெறுபேறு வருவதற்கு ஓரிரு மாதத்திற்கு முன் விசாவும் கிடைத்தது. சற்றும் விருப்பம் இல்லாதவளாய் தாய், தந்தை, தங்கையை விட்டு பிரிய மனமின்றி தன்னந்தனியாக மற்றவர் சுமைகளைத்

தன்னில் தாங்கிய சுமைதாங்கியாக வெளிநாடு புறப்பட்டாள். வெளிநாடு சென்று இறங்கியவளுக்கு அந்நாட்டு நடை, உடை, பாவனை, கலாசாரம் துண்டாய்ப் பிடிக்க வில்லை. கணவன் சிவா வேலைத்தளத்திலேயே அதிக நாட்கள் தங்குவதுண்டு. வீட்டுக்கு வருவதில்லை. அவளுக்கு தனிமை பெரும் கொடுமையாகியது.

"கூட்டுக்குள் அடைக்கப்பட்ட பறவை போல்" இவளும் நான்கு சுவர்களுக்குள் அகப்பட்டவளாக சோதனையின் விளிம்பில் இருந்தாள். இப்படிப்பட்டவளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் எரிகின்ற வீட்டில் மேலும் கொள்ளிக்கட்டை விழுவது போல பெரும் இடி ஒன்று விழக் காத்திருந்தது. வீட்டுக்குள் அடைபட்டு சும்மா இருந்து நேரத்தை வீணடிப்பதை விட வீட்டை துப்பரவு செய்ய எண்ணியவளுக்கு துப்பரவு செய்கையில் கைத்தொலைபேசி ஒன்று கையில் கிடைத்தது. கைத்தொலைபேசியை அழுத்தி பார்த்த போது சிவா வேறு பெண்ணுடன் எடுத்த புகைப்படம் கண்களில் பட்டது. மேலும் பார்க்க நிறைய புகைப்படங்கள் அவளை ஆச்சரியத்தில் தள்ளியது. தன்னையே முழுமையாக இழந்தவளாக பேய் அறைந்தவளாய் கட்டிலிலே அப்படியே தொப்பென்று விழுந்தாள். தற்கொலை செய்யலாம் என எண்ணியவள் மனதை சாந்தப்படுத்தியது உள்மனம் "ஒவ்வொரு பிரச்சனைக்கும் சாவு தான் முடிவென்றால் பலர் ஒவ்வொரு நாளும் செத்துசெத்து பிறக்க வேண்டும். வருகின்ற பிரச்சனைகளைச் சவாலாக எடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழப் பழக வேண்டும்" அவ்வாறு வாழ்ந்து மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருக்க விரும்பினாள் காவ்யா.

சற்று நாழிகை கழிந்து செல்ல வீட்டின் அழைப்பு மணியொலித்தது. கதவைத் திறந்தவள் முன் சிவா நின்றான். அவனைக் கண்டவுடன் கோபம் வந்து விட்ட அவளுக்கு கோபத்தை அடக்கி சாந்தப்படுத்தி அவனை அழைத்து சாப்பாடு கொடுத்து அவனைச் சற்று இளைப்பாற வைத்தாள். மெல்ல தனது கதையை ஆரம்பித்தாள். உங்கட கைத்தொலைபேசியில் உள்ள பெண் யார்? எனக் கேட்க அவன் அதெல்லாம் உனக்குத் தேவையில்லை என இருவருக்கும் பெரும் வாக்குவாதம் முற்றி சிவா காவ்யாவை கைநீட்டி அடித்தான். எனக்கு தெரிந்தாக வேண்டும் அவள் யார்?... காவ்யாவின் கடுமையான வார்த்தைகளாலும் அவள் கொண்ட கோப உக்கிரத்தையும் தாங்க முடியாதவன் உண்மையை உளற ஆரம்பித்தான். அவள் தன் மனைவியாகவும் ஆறு வயதில் ஒரு ஆண்பிள்ளை இருப்பதாகவும் இவ்வளவு நாட்களும் அங்கே இருந்ததாகவும் நமது திருமணம் அவளுக்குத் தெரிந்து சண்டை பிடித்து இங்கு வந்ததாகவும் கூறினான். காவ்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இவனிடம் இருந்து வேறெங்கும் செல்ல வேண்டும் என்று எண்ணியவள் சிவா நித்திரை கொண்டதும் முகவரி அறியா ஊரில் கையில் கிடந்த பணத்துடனும் தன் கடவுச்

சீட்டுடனும் வீட்டை விட்டு புறப்பட்டாள். நட்டாற்றில் நிற்கும் போது எவராவது உதவுவார் என்பது போல தமிழ்ப்பெண் ஒருவரின் உதவியுடன் தாய், தந்தை, சகோதரர்களுக்கு தேவையான உடுப்புக்கள், வாசனைத் திரவியங்களையும் வாங்கிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் பாசம்மிக்க பசுமையான தன் வீட்டை நோக்கி புறப்பட, விமான நிலையத்தில் விமானத்துக்காக காத்திருந்து கொழும்பில் இருந்த தனது நண்பியின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாள். அவளைக் கண்டதும் தாய் திகைத்துப் போனாள். என்ன காவ்யா ஒரு வார்த்தை கூடச் சொல்லாம திடீரென வந்திட்ட? என்றாள். உடனே காவ்யா அழ ஆரம்பித்து விட்டாள். அவளின் அழுகையை சமாதானப்படுத்திய தாய் நடந்தவற்றைக் கேட்டாள். காவ்யா நடந்தவற்றையெல்லாம் கூறினாள். இதைக் கேட்ட காவ்யாவின் தாய் அப்படியே கீழே இருந்து தன் மகளுக்கு தானே மண் அள்ளிப் போட்டு விட்டேன். அவளது வாழ்க்கையை நாசமாக்கி விட்டேன் என கதறி அழுதாள். காவ்யாவும் தாயை கட்டியணைத்து அழுதாள். இவ்வாறே தன் சோகத்தை கொஞ்ச கொஞ்சமாக கரைத்துக் கொண்டாள். இவ்வளவும் நடந்து மூன்று மாதங்கள் கண்மூடித் திறப்பது போல் ஓடி விட்டன.

சில நாட்கள் செல்ல க.பொ.த உயர்தர பெறுபேறும் வந்தது. காவ்யா தேசியமட்டத்தில் முதலாம் இடம் பெற்றாள். தனக்கு ஒரு பாதையை மூடிய இறைவன் மற்றப்பாதையை திறந்து விட்டான் என்று கடவுளுக்கு பல தடவைகள் நன்றி சொன்னாள். தேசியத்தில் முதலிடம் என்பதால் அவுஸ்ரேலிய பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தது. அங்கு சென்று தனது பட்டப்படிப்பை முடித்து தாய் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என எண்ணியவள் வறுமையினை இல்லாதொழிக்க கல்வி உதவி வேண்டும் என்ற நம்பிக்கையில் சிவா செய்த நம்பிக்கை துரோகத்தை மறந்தவளாக கல்வி பெறுபேற்றால் உயர்ந்திட்டவளாய் உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்ற பழமொழியைப் பொய்ப்பிப்பவளாக அவுஸ்திரேலியா நோக்கி புறப்பட்டாள். தன் சோகங்களைத் தன்னுள் புதைத்தவளாய்...

**சி.அனோஜா**

**தரம் - 11C**

# "எண்ணித்துணிக"

(திரை விலக மேடையின் மேல் மத்தியில் தேவலோகத்தைப் பிரதிபலிக்கும் காட்சிகள் தெரிகின்றன. அலங்கரிக்கப்பட்ட ஒரு கதிரை, அதன் முன்னால் மினுமினுப்பான மேசை ஒன்று. மேசையின் மேல் பொன்னுறை போடப்பட்ட பெரியதொரு புத்தகம். புத்தகத்தின் பின்னால் பார்வையாளருக்குப் புலப்படாவண்ணம் ஒருவர் மறைந்தவாறு படுத்திருக்கிறார். அவர்தான் சித்திர குப்தன். இடியோசை கேட்க, யமன் பிரவேசிக்கின்றார்.)

யமன் - (அங்குமிங்கும் தேடியவாறு) குப்தா... குப்தா... ஏய் சித்திரகுப்தா...

குப்தன் - (திடுக்கிட்டு விழித்தெழுந்து தடுமாறியவாறு) ம.. ம.. மன்.. னா...?

யமன் - என்ன குப்தா! ஆழ்ந்த உறக்கமோ?

குப்தன் - இல்லை... இல்லை... ஆ... ம் மன்னா...

யமன் - என்ன அலுத்துக்கொள்கிறீர் போலும்?

குப்தன் - வேறு எப்படி மன்னா?

யமன் - என்ன குப்தா?

குப்தன் - எழுதும் கை ஓயுமுன்னே விண்ணப்பங்கள் அடுக்கடுக்காய் அணிதிரள்கின்றனவே?

யமன் - ம...?

குப்தன் - முன்பானால் அப்படி இல்லை

யமன் - இது நவீன காலம், அது தான் அப்படி

குப்தன் - என்ன சொல்கிறீர்கள் மன்னா? சற்றுப் புரியும் படியாய்த்தான் கூறுங்களேன்?

யமன் - இதெல்லாம் சொல்லிப் புரியவைக்கக்கூடிய விடயமல்ல, வாரும் சென்று வருவோம்.

குப்தன் - எங்கு மன்னா?

யமன் - பூலோகத்திற்குத்தான்

குப்தன் - எதற்கு மன்னா?

யமன் - வேறெதற்கு உமக்குப் புரியவைக்கத்தான். ம.... வாரும்

(இருவரும் சென்று மறைய பறையொலி கேட்கிறது. சிலர் ஆடியவாறு தேவலோக காட்சியை வைத்தியசாலைக் காட்சியாக மாற்றுகின்றனர். நால்வர் பூமியைத் தூக்கி சவ ஊர்வலம் போல சுற்றி வந்து மேடையில் வைக்கின்றனர்.

பூமியின் பின்னால் பட்டமரக்கொப்பொன்று இருக்கிறது. மேடையின் வலது கீழ் மூலையில் சத்திரசிகிச்சைக் கூடம். அதனருகில் மருந்து கொடுக்குமிடம். நடுவில் வைத்தியரின் மேசை, கதிரை என்பனவும் இடது கீழ் மூலையில் நோயாளர் அமருவதற்கான இருக்கைகளும் போடப்பட்டுள்ளன. சிலர் சேலைன் போத்தல் கழுத்தில் தொங்க, நோயாளிகள் போல கையில் ஒவ்வொரு கொப்பியுடன் பிரவேசிக்கின்றனர். அவர்கள் தமக்குள் முண்டியடித்துக் கொண்டு கொப்பியை அடுக்க முற்படுகின்றனர்.)

ஒருவர் - நான்தான் முதல் வந்தனான்

மற்றவர் - விசர்க் கதை கதைக்கிறீர். நீர் வரேக்கயே நான் நிக்கிறன்.

வேறொருவர் - அப்ப நான் என்ன கடைசியா வந்ததெண்டே சொல்லுறியள்?

(அனைவரும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் போது
ஆண் தாதி ஒருவர் பிரவேசிக்கிறார்.)

ஆ.தாதி - ஸ்..... சத்தம் போடாதேங்கோ.. கத்தாதேங்கோ.. நீங்கள் மனிசரோ? மிருகமோ?
எல்லாம் லைன்ல நில்லுங்கோ

அனைவரும் - நம்பரைத் தாங்கோவன்

ஆ.தாதி - இண்டைக்கு நம்பர் இல்லை, லைன்தான்

(மீண்டும் அனைவரும் முண்டியடித்தல்)

ஆ.தாதி - பேந்தும் பார். ஏ.. ஏ.. ஏனப்பா, எருமை மாடுகள் போல

ஒருவர் - கொப்பியை அடுக்கிட்டு...

ஆ.தாதி - கொப்பியும் அடுக்க வேண்டாம் ஒண்டும் அடுக்க வேண்டாம்

(இவ்வேளை பெண்தாதி ஒருவர் பிரவேசிக்கிறார்)

பெ.தாதி - என்ன குழப்பம்?

ஆ.தாதி - எங்கயிருந்து வருதுகளோ தெரியா?
ஐயா வாற நேரமாகுது. எல்லாம் இருங்கோ

(அனைவரும் முண்டியடித்து விழ சிலர் இருக்கின்றனர்.)

ஒருவர் - கதிரையில்லை

ஆ.தாதி - அப்ப வீட்டயிருந்து கொண்டு வாரும். நேரத்துக்கு வந்து கதிரையை பிடிக்கத் தெரியா (தனக்குள்) இஞ்ச வருதுகள் உயிரை வாங்க

(இவ்வேளை உள்ளேயிருந்து ஐயோ என்ரை பிள்ளை என கூக்குரல் கேட்கிறது.)

ஒருவர் - ஆரோ ஒண்டு முடிஞ்சுது
பெ.தாதி - அது நேற்றையான் அக்சிடெண்ட் கேஸ்
மற்றவர் - எது? அந்த முச்சந்தியில ஓட்டோவும் மோட்டச் சைக்கிளுமோ?
வேறொருவர் - அதில்லை
மற்றொருவர் - அப்ப?
மற்றவர் - உது முருகன் கோவிலடியில கன்டரும் டிப்பரும்
ஒருவர் - இப்ப உதுதானே மலிஞ்சு கிடக்கு
ஆ.தாதி - ஐயா வாறார், அமைதியா இருங்கோ. பின்னுக்குத் தள்ளி நில்லும். சொல்லுறது விளங்கேல்லையோ?

(இவ்வேளை வைத்தியர் வந்து இருக்கையில் அமர்தல்)

ஆ.தாதி - ஒராள் வாங்கோ

(நோயாளி ஒருவர் தாண்டித் தாண்டி வருதல்)

வைத்தியர்- உங்களுக்கு என்னையா?
ஒருவர் - அதுதான் எனக்கும் தெரியேல்லை
வைத்தி - என்ன வருத்தம்
ஒருவர் - ஒரு வருத்தமும் இல்லை
ஆ.தாதி - அப்ப ஏன் இஞ்ச வந்தனியள்?
ஒருவர் - கண்டுபிடிக்கத்தான்
வைத்தி - என்னத்தை?
ஒருவர் - வருத்தத்தை
வைத்தி - என்ன செய்யுது?
ஒருவர் - ஒரே உடம்பெல்லாம் குத்தி உழையுது. இருக்கப் படுக்க ஏலாமல் நாரி நோ, வயிறெரிவு, பத்தாதேக்கு (ரகசியமாக)சலம் போகுதில்லை. கொலஸ்ரோல் கிலஸ்ரோல் ஏதுமோ தெரியேலை
வைத்தி - நல்லா மூச்சை இழுத்து விடுங்கோ. பின்னுக்குத் திரும்புங்கோ ஒருக்கா உடம்பு முழுக்க ஸ்கான் பண்ண வேணும்
ஒருவர் - ஸ்கானோ?
பெ.தாதி - ஓமையா படம் எடுக்கோணும்
வைத்தி - அதுக்கு முதல் எக்ஸ்றே எடுத்துப் பார்க்க வேணும்

ஒருவர் - உதெல்லாம் எங்க எடுக்கிறது?

வைத்தி - நான் எழுதித் தாறன் ஆஸ்பத்திரிக்கு வெளியால லாப்பில காசக் கட்டி எடுங்கோ

பெ.தாதி - எடுத்துட்டு அடுத்த கிளினிக் வரேக்கை கொண்டு வாங்கோ

வைத்தி - மருந்தை வாங்கிக்கொண்டு போங்கோ

(இவ்வேளை வைத்தியருக்கு தொலைபேசி அழைப்பொன்று வருகிறது.)

வைத்தி - கலோ... ஓ.. சொல்லுங்கோ?
ஓ...இப்ப எப்பிடி இருக்கு?
அப்ப ஓப்பிரேசன்தான் செய்யவேணும். அடுத்த மாசம் டேட்போடுவம். என்ன?
அது மட்டும் தாங்க மாட்டாரோ? அப்பிடியெண்டா... அடுத்த கிழமை செய்வம்.
முதலில காசைக் கட்டுங்கோ என்ன? காசில்லையோ?
அப்பிடியெண்டா சரிவராது. பிறகு எண்ட கதை வேண்டாம். முதலில போனை வையுங்கோ.

(கோபத்துடன் வெளியேறல். மற்ற நோயாளி ஒருவர் பின்னால் செல்ல முற்பட ஆண்தாதி இடைமறிக்கிறார்.)

மற்றவர் - ஐயா வருவாரோ?

ஆ.தாதி - ஐயா அவசரமா போறார். இருங்கோ வருவார்.

மற்றவர் - எப்ப வருவார்?

ஆ.தாதி - வருவார். இருங்கோ.

(முதலில் வைத்தியரிடம் காட்டிய நோயாளி இவ்வேளை மருந்தெடுக்குமிடத்தில் நிற்கிறார்.)

பெ.தாதி - இதை சாப்பாட்டுக்குப் பிறகு போடுங்கோ. இது சாப்பாட்டுக்கு முன் ரெண்டு வேளை, இது 6 மணித்தியாலத்துக்கு ஒருமுறை, இதை நோவுக்கு தேயுங்கோ, இதை சுடுதண்ணியில போட்டு ஆவி பிடியுங்கோ...

ஒருவர் - இது மருந்தோ?... சாப்பாடோ?...

மற்றவர் - இப்ப எல்லாரும் மருந்திலதானே வாழுறம்.

ஆ.தாதி - எல்லாற்றை உடம்பிலயும் இப்ப ரத்தம் மருந்தா தானே ஓடுது.

பெ.தாதி - எல்லாம் நீங்கள் தேடினது தானே...
ஒருவர் - (விசிறியவாறு) என்ன வெக்கை என்ன வெக்கை?
ஆண் 2 - தண்ணி, குடிக்கத்தண்ணி
ஆண் 3 - ஆ... வேர்த்து ஊத்துதே... சீ...
(உரைஞர் இருவர் பிரவேசித்தல்)
உரைஞர்1- உது வேர்வை இல்லை
உங்கட ஊழ் வினை
ஆண் 2 - நாங்கள் ஒரு பாவமும் செய்யேல்லை
உரைஞர்1- வினை விதைச்சவன் வினை அறுப்பான்
ஆண் 2 - நாங்கள் விதைக்கவும் இல்ல அறுக்கவும் இல்ல
உரைஞர்1- விதைக்காமலோ இப்ப அறுக்கிறியள்.
அனைவரும் - என்னத்தை
உரைஞர்2- வெயில்ல வாடுறத
ஆண் 1 - அது இயற்கையின்ர மாற்றம்
உரைஞர்1- அத மாத்தினது நாங்கள் தான்
ஆண் 2 - நீர் எண்டு சொல்லும்
பெண் 3 - நாங்கள் இல்லை
உரைஞர்2- நாங்கள் எல்லாரும் தான்
ஆண் 1 - என்ன விசர்க்கதை கதைக்கிறீர்?
உரைஞர்1- எல்லாம் நாகரிகம், விஞ்ஞானம்
ஆண் 3 - விஞ்ஞானத்தைப் பழிக்கிறீரோ
ஆண் 1 - விஞ்ஞானத்தால தான் இப்பிடி இருக்கிறம்
ஆண் 2 - இயங்காத இதயத்தையே இயங்க வைக்க முடியுது
ஆண் 3 - துண்டாடின உடற்பாகத்தை ஒட்ட வைக்க ஏலுது
ஆண் 4 - உலகத்துக்கே வெளிச்சம் கிடச்சது
ஆண் 3 - விண்ணுக்கும் மண்ணுக்கும் குதிக்க முடியுது.
ஆண் 1 - மருத்துவம்
ஆண் 2 - தொழிநுட்பம்
ஆண் 3 - வணிகம்
ஆண் 4 - போக்குவரத்து
ஆண் 1 - தொடர்பாடல்
ஆண் 2 - இப்படி எல்லாத் துறைகளும் வளர்ச்சி அடஞ்சது
ஆண் 4 - உலகமே கிராமமானது
உரைஞர்1- மறுக்கேல்லை
உரைஞர்2- உண்மைதான்
உரை 1 - அஞ்ஞானத்தை அகற்றியது விஞ்ஞானமே

பெண் 1 - அப்பிடி வாரும் வழிக்கு
உரை 1 - ஆனால்
அனைவரும் - என்ன ஆனால்
உரை 1 - உலகமே சுருங்கி விட்டது
ஆண் 1 - அதைத்தானே நாங்களும் சொல்லுறம்
உரை 2 - உலகத்தின்ர ஆயுளும் சுருங்கீற்றுது
ஆண் 3 - அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?
ஆண் 4 - எல்லாம் தலைவிதி
உரை 1 - அந்த விதியைத் தீர்மானிக்கிறது நாங்கள் தான்
அனைவரும் - நாங்களோ?
இருவரும் - ஓம் நாங்களே தான்
அனைவரும் - எப்பிடி
உரை 1 - அப்பமுதல் இப்ப வரை எங்களை நாங்கள் ஒருக்காத் திரும்பிப் பாக்கவேணும், கொஞ்சம் பின்னோக்கிப் பாருங்கோ

(உரைஞர் இருவரும் உறை நிலையில் நிற்க ஏனையோர் ஆடியவாறு காட்சிமாற்றம் செய்வர். பின்பு உரைஞர்கள் வெளியேற, பின்வரும் குரல் ஓசைக்கு ஏற்ப வேடுவர்கள் பிரவேசிப்பர்.)

ஹே..... ஹோ..... ஹோ ஹோ ஹோ...

(வேடுவர் சிலர் பட்ட மரத்தில் மரக்கிளைகளைச் செருகி, கூட்டாக ஆடிப்பாடி வேட்டையாடி, பச்சையாக உண்டு, பின்னர் உறங்குகின்றனர். வேடுவர் ஒருவர் கல்லோடு கல்லை உரச தீப்பொறி பறக்கிறது. அவர் பெரிய கூச்சலிட ஏனைய வேடுவரும் துயிலெழுந்து கூட்டாகக் கூச்சலிட்டு ஆடியவாறு கல்லை மரக்கொப்பினடியில் வைத்துச் சொல்கின்றனர்.)

(பின்வரும் பாடலுக்கு மாடுகள் போலவும் உழவர் போலவும் அபிநயித்தவாறு சிலர் பிரவேசிக்கின்றனர்.)

பாடல் - ஹெய் ஹெய்யா, ஹெய்யா ஹெய்யா ஹெய ஹெய்யா
ஹெய் ஹெய்யா, ஹெய்யா ஹெய்யா ஹெய் ஹெய்யா
தந்தனத்தானே தானே தந்தனத்தானே ஹெய் ஹெய்யா
தந்தனத்தானே தானே தந்தனத்தானே ஹெய் ஹெய்யா
தன்னானே தன்னானனே தன தன்னானானே தன்னானனே
தன்னானே தன்னானனே தன தன்னானானே தன்னானனே

பொலி பொலி பொலி பொலி பொலி பொலி
பொலி பொலி தாயே
பொலி பொலி பொலி பொலி பொலி பொலி
பொலி பொலி தாயே

(மேற்படி பாடலுக்கு வயல் உழுதல், விதை விதைத்தல், அறுவடை, சூடு மிதித்தல், தூற்றுதல், இடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர்)

பாடல் - ஏலேலோ ஐலசா ஏலேலோ
ஏலேலோ ஐலசா ஏலேலோ
ஏலேலோ தத்தெய் தாம் ஏலேலோ
ஏலேலோ தத்தெய் தாம் ஏலேலோ

வீசி வீசி வீசி மீன் பிடிப்போம் ஓடி வாருமே - வலை
வீசி வீசி வீசி மீன் பிடிப்போம் ஏலோ ஏலேலோ ஏலோ ஏலேலோ

(மேற்படி பாடலுக்கு படகு வலிப்பது போல சிலர் அபிநயிப்பர். பின்பு அப்படியே வரிசையாக நின்று சக்கரம் போன்று சுழன்றவாறு அபிநயிக்கும் போது பின்வரும் பாடல் இசைக்கப்படும்)

பாடல் - லல்லல்லல்ல லாலா லல்லாலலா
லல்லல்லல்ல லாலா லல்லாலாலா
லல்லல்லல்ல லாலா லல்லாலலா
லல்லல்லல்ல லாலா லல்லாலலா

(பின்வரும் பாடல் மாறும்போது அவர்கள் குதிரை போன்று அபிநயிப்பர்)

பாடல் - டக்டக் டக்டக டட்டட்டா டக்டக டட்டட்டா
டக்டக் டக்டக் டட்டட்டர் டக்டக் டக்டக் டட்டட்டா

(பாடல் நிறைவடையும் வேளை இருவர் ஆடியவாறு திண்ணை போன்ற ஒன்றைத் தூக்கி வந்து வைப்பர். தாய் ஒருவர் கிணற்றில் நீர் அள்ளிக் குடத்தில் ஊற்றி அதைத் தூக்கி வந்து வைக்கும்போது, மகள் மறுபுறம் முற்றம் கூட்டி நீர் தெளித்துக் கொண்டு இருக்கும் போது, ஆண்கள் சிலர் அவசரமாக வருதல்.)

ஆண் 2 - அண்ண, அண்ண, பரமண்ணை...
ஆண் 1 - என்னப்பா சங்கதி?
ஆண் 3 - இவன் சிவத்தானுக்கு கடலில திருக்கை அடிச்சிட்டுது
ஆண் 2 - ஒருக்கா விஷமுறி பாத்துவிடுங்கோ
ஆண் 1 - ஆளை மல்லாக்கா கிடத்துங்கோ
காயப்பட்டவர் - ஆ..... ஐயோ.......
ஆண் 1 - பிள்ளை, அந்த உரலையும் மூலிகை டப்பாவையும் கொண்டு வா
மகள் - இந்தாங்கோப்பா
பெண் 2 - பிள்ளை அந்த அடுப்பில ஒருக்கா சுடு தண்ணி வை பிள்ளை
மகள் - ஓமம்மா
ஆண் 1 - ஆளை அமத்திப் பிடியுங்கோ
காய - ஆ... ஐயோ.....
(விஷக்கடியுண்டவர் அலறல்)
ஆண் 1 - கொஞ்சம் பொறப்பா
ஆண் 1 - இனி எல்லாம் சரி வரும்
சரி களைப்பாற கொஞ்சம் படும்
ஆண் 2 - அந்த வெத்திலை தட்டத்த இங்கால தள்ளி விடண்ண
ஆண் 3 - அது சரி மணியத்தார் உம்மட வயல்ல எப்ப அறுவட தொடங்கப் போறீர்?
ஆண் 4 - வாற கிழமை மட்டில தொடங்குவம்
ஆண் 2 - ஓ வாற கிழமை எண்டா சரிவரும்
ஆண் 1 - பிள்ளை, வெளியால தொட்டில தண்ணிய ஊத்தி விடு மோனை
பெண் 2 - (கையில் மோர் கொண்டு வந்தவாறு) ஓ மாடும் வந்து எட்டிப்பாக்குது
மகள் - சரியம்மா
ஆண் 3 - சரி நேரமாகுது கிளம்புவம்
அனைவரும் - வாறமண்ணை
ஆண் 1 - ஓம் வாங்கோ

(சிலர் இசைக்கேற்ப குதிரை போல வந்து திண்ணையைத் தூக்கிச்சென்று பின் ரெயின் போல அசைந்து செல்லல்)

(ஒருவர் - கைத்தொலைபேசிகள்,மின்குமிழ் என்பவற்றுடன் முன்மேடைக்கு வந்து)

ஒருவர் - (கைதட்டி) எல்லோரும் ஓடி வாங்கோ, இஞ்ச..... (மின்குமிழை தூக்கி காட்டல்)
அனைவரும் - ஆகா வெளிச்சம் வெளிச்சம்

ஒருவர் - ஓ! வெளிச்சம் வெளிச்சம் (அனைவருக்கும் கைத்தொலைபேசியை வழங்குவார்)

அனைவரும் - கலோ... கலோ

உரை 1 - (பார்வையாளரை நோக்கி) மெல்லத் தொடங்குது வில்லங்கம்

(பின்பு பாண்ட் ஒலிக்கேற்ப கணனியைத் தூக்கி வர சிலர் ஆரத்தி எடுத்தல், பூ தூவுதல், மாலை போடல், விழுந்து வணங்குதல் போன்ற செயற்பாட்டுடன் அதனை பக்குவமாக பூமிக்கு மேல் வைக்கும் போது மரக்கிளைகளை முறித்தல்.) (பின்னர் அருகிலுள்ள குளத்தைக் காட்டி)

ஒருவர் - இது இனி என்னத்துக்கு? இந்தக்குளத்தை மூடுவமோ?

அனைவரும் - ஓ...

(மேடையின் கீழ் இடதில் மரக்குற்றியும் கற்கள் சிலவும் உள்ளன. மேடையின் DR, DC, CC, DL, CR, CL ஆகிய பகுதிகளில் சிலர் நின்று மண்வெட்டி, பிக்கான் போன்றவற்றுடன் குளம் ஒன்றை மூடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.)

ஒருவர் - ஆ....

மற்றவர் - ஓ....

ஒருவர் - இந்தா கொட்டு

மற்றவர் - பிடி

(இவ்வேளை எழுத்தாளர் ஒருவர் பிரவேசிக்கின்றார்)

எழுத்தாளர் - நிறுத்துங்கள

(எவரும் இதனை செவிசாய்க்கவில்லை)

எழுத்தாளர் - நிறுத்துங்கள்

அனைவரும் - ஏன்

எழுத்தாளர் - என்ன செய்யிறீங்கள்

ஒருவர் - பார்க்கத் தெரியேல்லயே?

எழுத்தாளர் - ஏன் இந்த விபரீதம்?

ஒருவர் - நீர் ஆர் காணும்?

எழுத்தாளர் - நான் ஒரு எழுத்தாளன்

வேறொருவர் - நீர் எழுதுற வேலைய மட்டும் பாரும்

எழுத்தாளர் - உங்களுக்கு நீங்களே கொள்ளி செருகிறியள்

அனைவரும் - என்ன உளறுறீர்?

ஒருவர் - வீணாய் பிதற்றுறார்

(அனைவரும் கைகொட்டி நகைத்தல்)

எழுத்தாளர் - வேதமும் பிதற்றல் தான்

ஒருவர் - இது வெறும் குளந்தானே

மற்றவர் - உதால ஒரு பிரயோசனமும் இல்லை

எழுத்தாளர் - அப்படிச் சொல்லாதீர்கள். ஒவ்வொரு குளமும் ஒவ்வொரு உயிர்ச் சூழல்.

(அனைவரும் எழுத்தாளரைப் பிடித்து கலைத்துவிட்டு தமது செயற்பாட்டில் ஈடுபடுதல்)

(எழுத்தாளர் மீண்டும் பிரவேசிக்கின்றார்)

எழுத்தாளர் - கொஞ்சம் பொறுங்கோ

ஒருவர் - நீர் இன்னும் போகேல்லையோ

எழுத்தாளர் - வீணாய் ஏன் இதை மூட முடிவெடுத்தீர்?

மற்றவர் - வீணாகும் வாழ்வை சீர்படுத்தத்தான்

ஒருவர் - இதை மூடி இதுக்குமேல பெரிய மாடிக்கட்டடம் ஒண்டு கட்டப்போறம்

மற்றவர் - அல்லது கொம்பியூட்டர் சென்ரர் அமைக்கப்போறம்

எழுத்தாளர் - ம்....... வேடிக்கை (நகைத்தல்)

அனைவரும் - என்ன நகைப்பு?

எழுத்தாளர் - பாவம்

அனைவரும் - ஆர்?

ஒருவர் - அவர்தான்

எழுத்தாளர் - இல்லை... இல்லை

அனைவரும் - பின்ன

எழுத்தாளர் - நீவிர்தான்

அனைவரும் - பைத்தியமே

எழுத்தாளர் - ஓம் பைத்தியம் தான்

அனைவரும் - ஆருக்கு

எழுத்தாளர் - எல்லாருக்கும், எம் எல்லாருக்கும் தான்

அனைவரும் - உளற வேண்டாம்

ஒருவர் - வீண்வாதம் வேண்டாம்

மற்றவர் - விலகி வழிவிடும்

எழுத்தாளர் - யானை தன்கையால் தன்தலையில் மண் அள்ளிக் கொட்டுவது போல இருக்கு

ஒருவர் - இந்த ஊத்தைக் குளத்தைத் தூர்க்கிறதுக்கு இப்படி விதண்டாவாதம் கதைக்கிறியள்

மற்றவர் - இதால வாற விபரீதம் இவருக்கு விளங்கினாத்தானே?
அங்கா...(மக்கள் சிலர் சொறி சிரங்கு ஊனம் போல் அபிநயிப்பர்)

ஒருவர் - பாத்தீரே?

மற்றவர் - சொறி, சிரங்கு, நோய், நொடி...

வேறொருவர் - எல்லாம் இதால தான்

எழுத்தாளர் - உது மடமை, அறிவீனம்

அனைவரும் - எது மடமை?

எழுத்தாளர் - குளத்தால ஒருநாளும் குடி முழுகாது, குடி உயரும்

ஒருவர் - இவர் பழங்கால மனுசர்

மற்றவர் - இவருக்கொண்டும் விளங்காது

அனைவரும் - ஓ பழங்காலம் (கை கொட்டி நகைத்தல்)

எழுத்தாளர் - ம்... பழங்காலம்.... பழங்கால மனுசர் பக்குவமாய் வாழ்ந்தனர், புதுக்கால மனுசர்தான் பூமியைப் புதை குழி ஆக்கிறியள்

ஒருவர் - இவரைப் பிடிச்சு சிறையில அடைக்கவேணும்

எழுத்தாளர் - சிறை! இப்ப எல்லாருமே கைதியள் தானே? சூழ்நிலைக் கைதியள், சூழலியல் அகதியள்.

அனைவரும் - என்ன சொல்லுறீர்

எழுத்தாளர் - எமது பூமித்தாயை நாம் பக்குவமாய்க் கையாள வேண்டும்
இல்லை என்றால்...

அனைவரும் - இல்லை என்றால்...?

எழுத்தாளர் - பரிதவிக்க நேரிடும்

(எழுத்தாளரை இருவர் சிறைபிடித்து இழுத்துச் செல்லல்)
(இவ்வேளை வினோதமான வண்ண வண்ண ஆடைஅணிந்து சிலர் பிரவேசிக்கின்றனர்.

ஆண் 1 - ஓடியா ஓடியா வட்டியில்லை, வட்டியில்லை

ஆண் 2 - இலகு தவணை! இலகுதவணை!

ஆண் 3 - குறைந்த கட்டணம்

மூவரும் - லீசிங்! லீசிங்!

ஆண் 1 - கன்ரர்

ஆண் 2 - டிப்பர்

ஆண் 3 - கார்

பெண் 1 - வான்

ஆண் 4 - மோட்டார் சைக்கிள்

(அனைவரும் வாகனங்களைப்போல் ஒலியெழுப்பியவாறு செலுத்துதல்)

(இவ்வேளை மேடையின் ஓர் மூலையில் பதிவாளர் பிரவேசிக்க,அவரைச் சூழ்ந்தவாறு சனக்கூட்டம் வலது மேடையில் சேர்கிறது.)

ஆண் 1 - என்ன இரைச்சல்?
ஆண் 2 - ஏன் கூச்சல்?
ஆண் 1 - ஏன் இந்த முண்டியடிப்பு?
பதிவு செய்பவர் - எல்லாம் வரிசையா நில்லுங்கோ, பேர்களை பதியுங்கோ
ஆண் 1 - ஏன் பதிவு?
ப.செ - உமக்கு விசயமே தெரியாதோ?
ஆண் 1 - இல்லையே
ஆண் 3 - செவ்வாய்க்ப் போகப் பதிவு செய்யிறம்
ஆண் 1 - எப்ப, நாளைக்கோ?
அனைவரும் - இல்லை
ஆண் 2 - அப்ப மறுநாளோ?
அனைவரும் - இல்லை
ஆண் 1 - வருகிற கிழமையோ?
பெண் 2 - இல்லையப்பா, வருகிற வருடம் விட்டு,
பெண் 1 - அடுத்து வரும் வருடம் தாண்டி,
ஆண் 3 - அங்கால பத்தாண்டு கடந்து...
ஆண் 4 - போகப்போறம்
ஆண் 1 - அதுக்கு இப்பவேயோ?
பெண் 2 - இப்ப பதிஞ்சா தான் அப்ப போகலாம்
ஆண் 1 - அப்ப நாங்களும் வாறம் (சனக்கூட்டம் இரைச்சலுடன் உள் செல்ல, மீண்டும் வைத்தியசாலைக்காட்சி அமைக்கப்படுகிறது. முன்பு இருந்த நிலையில் அனைவரும் உள்ளனர். இதுவரை உறைநிலையில் நின்ற உரைஞர் இருவரும் அசைவுக்கு வருகின்றனர்)
உரை 1 - இப்ப விளங்குதோ?
உரை 1 - மரங்களைக் கண்டபடி வெட்டினம்
உரை 2 - மண்ணை அகழ்ந்தோம்
உரை 1 - குப்பைகளைப் பெருவாரியாக எரித்தோம்
உரை 2 - உலகைப் பாதுகாக்கும் ஓசோன் குடையையே ஓட்டையாக்கினோம்
இருவரும் - அது மட்டுமா?

உரை 1 - விசத்தை உண்டோம்
அனைவரும் - ஐயோ விசமா?
இருவரும் - ஆம்
உரை 1 - உணவுக்குப் பதிலாக...
உரை 2 - விசமே உடலில் சேர்ந்தது.
உரை 1 - கிருமி நாசினி!
உரை 2 - கிருமிநாசினி!
உரை 1 - எங்கும் கிருமி நாசினி, எதிலும் கிருமி நாசினி
உரை 2 - நம் கரங்களில் நச்சுக் கோப்பைகள்
உரை 1 - அதால உணவே விசமாகிப் போனது
நோயற்ற யாரும் இவ்வுலகில் இல்லாத நிலை வந்தது.
இருவரும் - இதுபோதாதென்று, புகை, புகை,வாகனப்புகை
உரை 2 - புகை, கரும்புகை கக்கி ஞாலமே இருண்டது
அனைவரும் - தண்ணி, தாகம், தாகம்.....
உரை 1 - தவிச்சவாய்க்கு இனித் தண்ணியும் கிடையாது
ஆண் 3 - என்ன சாபம் இடுறீரா
உரை 1 - சாபம் இல்ல
உரை 2 - இதுதான் சத்தியம்
ஆண் 1 - ஊர் முழுக்க கிணறு தானே
ஆண் 2 - ஏன் தண்ணி இல்லை?
உரை 1 - ஊர் முழுக்க கிணறு இருக்கும். ஆனால்.....
உரை 2 - ஒரு வாய் குடிக்க நீர் இருக்காது
அனைவரும் - ஏன்?
உரை 1 - உவராகிப்போய்விடும்
உரை 2 - ஒருபக்கம் கடும்கோடை
உரை 1 - சுட்டெரிக்கும் சுடு வெயில்
உரை 2 - மறுபுறம் நீர்த்தாகம்
உரை 1 - பசி, பஞ்சம், பட்டினி
சிறு நீரைக் குடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.
அனைவரும் - சீ.... சிறு நீரோ
ஆண் 1 - உது பொய்
உரை 1 - பொய்யில்லை, நிஜம் இதுதான்
உரை 2 - சூடான் போல்........
உரைஞர் 1 - அன்றொரு நாள், அண்டவெளியில் இருந்து வந்த ராட்சத விண்கற்கள்
உரை 2 - பூமியை மோதி வெடித்ததால்
உரை 1 - கிளம்பிய தூசிமண்டலம்

உரை 2 - சூரியனை மறைத்ததில்
உரை 1 - சக்திப் பாய்ச்சல் தடைப்பட்டு
உரை 2 - பூமி இருண்டு குளிர
இருவரும் - பெரும் உயிர்கள் செத்து மடிந்தன

(இவ்வேளை சிலர் முனகியவாறு துடிதுடித்து விழுதல்)

உரை 1 - விசவாயு சுவாசித்து விக்கினங்கள் தேடினோம்
ஒரு நிமிடம் கண் மூடி உணர்ந்து பாருங்கள்
உரை 1 - கசம்
உரை 2 - இருமல்
உரை 1 - பசியின்மை
உரை 2 - சுவாசக்கோளாறு
உரை 1 - புற்றுநோய்
உரை 2 - தொழுநோய்
உரை 1 - ஒவ்வாமை

(இவ்வேளை அனைவரும் மேற்படி நோயினால் பீடிக்கப்பட்டோர் போல் அபிநயிப்பர்.)

அனைவரும் - ஐயோ வேண்டாம்
இருவரும் - இதுக்கெல்லாம் காரணம் யார்?
அனைவரும் - நாங்கள்தான், உணர்ந்துகொண்டோம்.
ஆண் 1 - எங்களால தாங்கேலாது.
உரை 1 - ஊரைச்சூழக் குளம் அமைத்தார் எம் முன்னோர். எதற்காக?
உரை 2 - எம் கண் முன்னே அவை காணாமல் போயின.
உரை 1 - உண்டபின் நூறடி உலாவென்றார்...
அனைவரும் - அதுக்கெல்லாம் நேரம் எங்கே?
உரை 1 - அவசரம்
உரை 2 - அவசரம்
உரை 1 - எதிலும் அவசரம்
உரை 2 - இயந்திர உலகில் இயந்திரங்களாய் மாறிவிட்டோம்
உரை 1 - நாகரிகம் என்ற மாயவலையில் சிக்கி
உரை 2 - நாட்டையே நாசம் செய்தோம்.
அனைவரும் - போதும், நாம் விழித்துக் கொண்டோம்.
உரை 2 - விழித்தால் மட்டும் போதாது.
அனைவரும் - வேறென்ன செய்ய வேண்டும்?

உரை 1 - உடனே செயற்பட வேண்டும்
ஆ 1 - வாருங்கள் ஒன்றாய்க் கூடிக் குளம் அமைப்போம்.

(இவ்வேளை அனைவரும் உறைநிலைக்குச் செல்ல யமனும் சித்திரகுப்தனும் பிரவேசிக்கின்றனர்.)

யமன் - இப்போது புரிகிறதா? பூலோகத்தின் இன்றைய நிலை
குப்தன் - ஆம் மன்னா நன்றாகப் புரிகிறது.
யமன் - இனி வாழ்வதும் அழிவதும் அவர்கள் கையிலேதான் உள்ளது. ம்....சரி நேரமாகி விட்டது. நாம் புறப்படுவோமா?
குப்தன் - ஆம் மன்னா புறப்படுவோம்.

(இருவரும் சென்று மறைய அனைவரும் அசைவுக்கு வருகின்றனர்.)

ஒருவர் - ம்... வாருங்கள் ஒன்றாய்க கூடிக் குளம் அமைப்போம்.
அனைவரும் - (அவையோரை நோக்கி) நீங்களும் வாருங்கோ

(பின்வரும் பாடல் ஒலிக்க அனைவரும் குளம் வெட்டுதல்,மரம் நாட்டுதல்:நீர் ஊற்றுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்)

பாடல் - நல்ல மரங்களை நல்ல மரங்களை
நாங்களும் நாட்டிடுவோம் - இங்கே
நாலாபுறமும் நன்மை விளைத்திடும்
சோலைகள் ஆக்கிடுவோம்

சுத்தமான காற்று வேண்டும்
சுகமாய் வாழவே - நாமும்
சுற்றிச் சுற்றிச் சூழலையே
சுவாசித்திடுவோமே நன்றாய் சுவாசித்திடுவோமே.
(திரை மெல்ல மூடுகிறது.)

எழுத்துருவாக்கம் –
திருமதி ஜீவாஜினி தேசவன்
ஆசிரியை

# பாடசாலைக் கீதம்

**இராகம் : ஹம்சத்வனி**

வாழிய நம் கலைக்கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
கழனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்குநற் கிறிஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும்
உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர் களைப்
படைத்து நற் பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல் நாடெமதே

மனதினில் உன் திறம் மதிப் பொடுநிலைத்திட
மகிழ்வொடு நாம் முயல்வோம்
கலைபல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடுவாய் தாயே

நிலமிசை நின்புகழ் நீடுவாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலை பெறு கலைகளின் நிறைகுடமாக
நீயென்றும் வாழிய வாழியவே.

**ஆக்கம் : திருமதி சரஸ்வதி கனகரட்ணம்**
**ஓய்வுநிலை பிரதி அதிபர்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
“வண்ணம் மலர்” சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.



# கஜமுகன் தொலைத்தொடர்பு நிலையம்
# Kajamugan Communication

DHI, கூரியர் சேவைகள், சகலவிதமான Phone Cards,
றிலோட் வசதிகள், Western Union, NSB பணம் வைப்பிலிடும் வசதி,
சகல விதமான பில் கட்டணங்களும் செலுத்தும் வசதி, (SLT, CEB)



நீங்களே உங்கள் தொலைபேசிக்கு றீலோட் செய்யும் வசதி
பாடசாலை உபகரணங்கள், போட்டோ கொப்பி வசதி,
என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.



***கோப்பாய் சந்தி,***
***கோப்பாய்.***








**T.P : 0212230051**


யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
“வண்ணம் மலர்” சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# ரியோ ஐஸ்கிறீம்
# Tio Ice Cream





சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளையும்
ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.



***நீர்வேலி தெற்கு,***
***நீர்வேலி.***

**T.P : 077 7703766**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
"வண்ணம் மலர்" சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# சக்தி ஜீவல்லர்ஸ்

# Shakthy Jewellers



***Manufacturers of gold jewels***



*புதிய மாநகர சபைக் கட்டடம்,*
*இல. 80/4, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**T.P : 021 221 7750**
**077 239 5747**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
"வண்ணம் மலர்" சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# மித்திரன் மல்ரி ஸ்பொட்

# MITHERAN MULTI SPOT

அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள்,
பாதணி வகைகள், Bag வகைகள்,
பாடசாலை உபகரணங்கள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.






*மானிப்பாய் வீதி,*
*கோப்பாய் சந்தி, கோப்பாய்.*

***Manipay Road,***
***Kopay Junction, Kopay.***

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
"வண்ணம் மலர்" சிறப்புற மரை வாழ்த்துகின்றோம்.

# A.R.P.காட்வெயர்



அனைத்து விதமான
கட்டிடப் பொருட்களையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.











பருத்தித்துறை வீதி,
கோப்பாய் சந்தி.

T.P : 021 223 1444

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
"வண்ணம் மலர்" சிறப்புற மரை வாழ்த்துகின்றோம்.



# லக்ஷி சவுண்ட்

உரிமையாளர் : S.சந்திரராசா

சகலவிதமான நிகழ்வுகளுக்கும்
ஒலியமைப்பு செய்து
கொடுக்கப்படும்.



கோப்பாய் சந்தி,
கோப்பாய்.

T.P : 077 3032088

NEW REVOLUTION IN CCTV MARKET

HIKVISION

**Recording Comparison H.265 + VS H.264**

**Reduce your number of HDD'S. Save Your Money more picture quality 4 times more recording with H.265+ DVR only from HIKVISION**

NEW

**Recording in 4TB HDD with 720P Resolution**

| 720P (4TBHDD) | H.264 | H.265 | H.265+ |
|---|---|---|---|
| 4CHANNELS | 51Days | 100Days | 204Days |
| 8CHANNELS | 25Days | 50Days | 102Days |
| 16CHANNELS | 12Days | 25Days | 51Days |

**Recording in 4TB HDD with 1080P Resolution**

| 1080P (4TBHDD) | H.264 | H.265 | H.265+ |
|---|---|---|---|
| 4CHANNELS | 25Days | 50Days | 102Days |
| 8CHANNELS | 12Days | 25Days | 51Days |
| 16CHANNELS | 6Days | 12Days | 25Days |

NEW

H.265+ Supreme Compression




Remote Viewing




**H.265+ Supreme Compression**


**H.265 + SMOOTH & CLEAR**

H.265 + smart

Predictive Encoding

Noise Supperssion

Long - term Bitrate Control




**DS-7104HQHI-K1 -DS-7108HQHI-K1 -DS-7116HQHI-K1**
**DS-7204HQHI-K1 -DS-7208HQHI-K1- DS-7216HQHI-K1**

# ALDI ELECTORONICS

**No,15 stanly Road**


**Jaffna ,TP :-0212222676**

# நன்றி நவில்கின்றோம்

எமது கல்லூரி என்னும் நந்தவனத்தில் மலர்ந்து மணம் பரப்பும் வண்ண மலர்களில் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்படும் 'வண்ணம்' என்னும் மலரினை கரங்களில் ஏந்தும் போது மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. இவ் இதழின் வெளியீட்டிற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த அனைவருக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையோம்.

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய அதிபர், பிரதி அதிபர் ஆகியோருக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், எமது வண்ண மலர் உருவாக்கத்திற்கு நிதியுதவி நல்கிய திருமதி தர்சிகா தயாபரன் (சுவிஸ்லாந்து) அவர்களுக்கும், விளம்பரங்கள் தந்து உதவி நல்கிய வணிகப் பெருமக்களுக்கும் அட்டைப் படவாக்கத்தை தயாரித்த திரு.V.கேசவன் அவர்களுக்கும் மலர் வெளியிடுவதில் அயராது உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

எமது 'வண்ணம்' மேலும் வண்ணம் பெற்றுத் திகழ சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய 'சிவரஞ்சனம்' அச்சகத்தாருக்கும், சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைத்த பெருமக்களுக்கும் நன்றி நவில்கன்றோம்.



# PREM

*Electricals and Construction*

PREM
Electricals And Construction Pvt.Ltd.

# PREM
# Electricals and Construction

**All Kind of Electricals , wiring plumping , Aluminum fittings and Building works**

Please visit to
www.prem.lk



Rededin
Director

077 804 8143

021 223 1393

premelectricalp@yahoo.com
premelectrical7@gmail.com

prem Electrical's Engineering/ Constrution

**Prem**
Electrical's Plumbing Contractor

Vairakkandy,
Kopay Center, Kopay,
Jaffna.

சிவரஞ்சனம். 077 3068982